Free Circulation GERMANY , ENGLAND சித்திரை .April.2018

# வெற்றிமணி

Vettimaniy

1950 (68)

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை



Tel:0231 162377

Königswall 16 (Am HBF)

44137 Dortmund

Germany Fax:0231 147836

## எதிரியின் வாயிலிருந்தும் நான்கு நல்ல வார்த்தைகள்!

Dr IN

## இளைய தலைமுறையினர் கைகளில் நம் கலைகள்



இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்



மாபெரும் ராஜமுத்திரை

S.K.Silks & Gold Paraadise

16 வது ஆண்டு ஆரம்பத்தினை முன்னிட்டும் தமிழ் புத்தாண்டை முன்னிட்டும்

07.04.2018 சனிக்கிழமை மட்டும்

ONE DAY SALE

அனைத்து ஆடைகளும் 50% முதல் 70% வரை

Mr.P.Sritharan.Proprietor

Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

U.K

செல்வராஜா

Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG

Germany

RHEINISCHE STR 52 44137 DORTMUND Tel:0231 819288

Page.9

StaR-Impex


Tel:0231 860 26 96

Kipper Str.03

44147 Dortmund/ Germany

S.29

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி



# இளைய தலைமுறையினர் கைகளில் நம் கலைகள்!

மாதவி

கனடா - தமிழர் தகவல் 27 வது ஆண்டு பூர்த்தி மலரில் [05.02.2018] வெளிவந்த கட்டுரை

தமிழ்மக்கள் தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து யோ்மனியில் தஞ்சம் அடைய ஆரம்பித்தகாலம் 1979 என்று கொள்ளலாம். இருந்தாலும் அதிக அளவில் யோ்மனிக்கு வந்து சேர்ந்த காலம் 1980 தொடக்கம் 1998 வரை என்று வரையறுக்கலாம். அதன்பின் பலா் வந்தாலும் பெரும் தொகையாக அன்றி தனித்தனியாக வந்தனா். தற்போது திருமண பந்தத்தில் இணைய ஆண்களும் பெண்களும் யோ்மனியில் முறைப்படி அனுமதிபெற்று வரும் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது.

அன்று அகதிகளாக இங்கு வந்த காலத்தில், புதிய மொழி, புதிய கலாச்சாரம், பொருளாதாரம் இவற்றை எதிர்கொண்டு புலம்பெயா்வாழ்வுக்கு தம்மை இசைவாக்கம் செய்து கொள்ள நீண்டகாலம் ஏற்பட்டுது. இந்த இசைவாக்கம் ஒரு புறம் நடக்க, தாயகத்தில் தமிழ் கலைகளோடு ஒன்றிவாழ்ந்த மக்கள் இங்கு வந்து தமது பொருளாதாரத்தையும், தாயகத்தில் வாழும் தம் சொந்தங்களின் வாழ்வை வளப்படுத்தவும் போரடி உழைத்தாலும், அவா்களிடம் இருந்த தமிழ் உணா்வும், கலை மணமும் அவா்களைச் சும்மா இருக்க விடவில்லை என்பது உண்மை.

தைப்பொங்கல் நத்தார்பண்டிகை சரஸ்வதிபூசை புதுவருடப்பிறப்பு, என பண்டிகைகள் மெல்ல மெல்ல அவா்கள் வாழ்வில் தலைகாட்டத் தொடங்கின. அந்தக் கொண்டாட்டங்களில் தமிழும், கலைகளும், மெல்ல மெல்ல, அரங்கேறின. பண்டிகைகளில் மட்டுமன்றி தாயகத்தில் அன்று இருந்த போர்ச்சூழல் பல கலைகளிலும் இங்கு கருப்பொருளானது. மொழிகளுக்கு அப்பால் யோ்மனியா்களுக்கு நம் போராட்டத்தை வெளிப்படுத்தவும், அதன் நியாயத்தை வெளிபடுத்தவும் கலைகளே உதவின.

ஆரம்பகாலத்தில் 24 வயதிற்கும் 40 வயதிற்கும் உட்பட்ட தமிழ் மக்களே! அதிகமாக இருந்தனா். சிறுவா்கள் அதிலும் வயது ஒத்த சிறுவா்கள் மிக மிகக் குறைவு. அப்படி வயதொத்தவா்கள் இருந்தாலும் ஒரே நகரத்தில் இருப்பவா்கள் மிக மிகக் குறைவு. இதற்கு ஒரு காரணம் பிற நாடுகள் போல் யோ்மனியில் தமிழ் அகதிகளை ஒரே நகரத்தில் வாழ அரசு அனுமதிக்கவில்லை.

அத்துடன் ஒரு நகரத்தில் இருந்து 50 கி.மீ அப்பால் உள்ள ஒரு நகரத்திற்கு செல்வது என்றால் அனுமதி பெற்றே செல்லவேண்டி இருந்தது. அதனால் கூட்டு முயற்சிகள் யோ்மனியில் தமிழ் மக்களுக்கு மிகவும் கடினமானதாக இருந்தது.

தாயகத்தில் ஒரு கிராமத்தில் நடைபெறும் கலை விழா என்றால், பல கிராமத்து மக்களும் பங்குகொள்ளும் ஒரு பெருவிழாவாக அமைந்து இருக்கும். பார்வையாளா் முதல் பங்கு கொள்ளும் கலைஞா் வரை பல கிரமத்தவா்கள் கலந்து கொள்வார்கள்.

ஆனால் யோ்மனியில் அது சிரமம். அந்தச் சிரமத்திலும் ஒரு சிறப்பு இருந்தது. தாயகத்தில் ஒரு கிரமத்தில் நடைபெறும் விழாவில் பல கிராமத்து மக்கள் ஒன்று கூடினார்கள். இங்கு யோ்மனியில் ஒரு கிராமத்தில் பல கிராமத்துமக்கள் ஒன்றாக வாழ்ந்தார்கள்.

இப்படியாக சிறிய தொகையில் யோ்மனியில், ஒரு கிராமத்தில் அடைபட்டு, தாயகத்தின் பல கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தார்கள். நாட்டுக்கு நாடு அல்ல, கிரமத்திற்கு கிராமம் கூட சில உணவுப்பழக்கங்கள், பண்பாட்டு வளக்கங்கள் வேறு பட்டே இருக்கும். இந்த வேறுபாடுகளிலும் அவா்கள் அன்று ஒன்றுபட்டு சிறப்பானவற்றை பெற்று தமிழையும் கலைகளையும் இங்கு வளா்த்தனா்.

சேர சோழ பாண்டிய மன்னா்களது காலத்தில் இலங்கைக்கு படையெடுத்த அரசா்கள், தாங்கள் சிறைப்பிடிக்கும் கைதிகளது கலைத்திறனை பாவிக்கத்தவறவில்லை. அதன் காரணமாக இலங்கையில் இருக்கும் பல பௌத்த சிற்பங்கள் முதல் இந்துகளின் ஆலயங்கள் சிற்பங்கள் வரை அவா்களது தாக்கம் உள்ளதை சரித்திரம் சொல்கின்றது. இதற்கு இசுறுமுனி சிற்பம் ஒரு உதாரணம் (ஈஸ்வரமுகம்)

இது போன்றே தாயகத்தில் இருந்து யோ்மனியில் அகதியாக தஞ்சம் புகுந்தவா்களில் ஆசிரியப்பணி புரிந்தவா்கள், இசை, நாடகம், ஓவியம் இவற்றுடன் ஈடுபாடு உள்ளவா்கள், பாண்டித்தியம் பெற்றவா்கள் இவா்களது பணி யோ்மனியில் தமிழா்கள் மத்தியில் பரவலாகின. பண்டிகைகள் முத்தமிழ் விழாக்களாகின.

ஆரம்பத்தில் பிறந்த நாள் விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், திருமணவிழாக்கள், திருமணநினைவு நாள் விழாக்கள், இவற்றில் எல்லாம் பாடத் தெரிந்தவா்கள் பாடுவார்கள், பிறரையும் பாடவைப்பார்கள், தனி நடிப்பின் மூலம் மக்களை மகிழ்விற்பார்கள், பரதநாட்டியம் தெரிந்தவா்கள் தாமும் ஆடி ஆர்வம் உள்ளவா்களையும் மேடை ஏற்றுவார்கள். ஓவியம் தெரிந்தவா்கள் அதனை அலங்காரத்தில் காட்டுவார்கள். இப்படி ஆரம்பித்த விழாக்கள் கடைத்திறப்புவிழாக்கள் வீடு குடிபூரல்கள் என நீண்டு வளா்ந்தது.

அன்று நம்மக்கள் கூடும் இடம் எல்லாம் ஊரைப்பற்றி கதைப்பார்கள் அடுத்து ஒவ்வொருவரும் தங்கள் பிள்ளைகள் பற்றியும் எதிா்காலம் பற்றியும் அக்கறையுடன் உரையாடுவார்கள். அத்தரணத்தில் அந்தப் பிள்ளைகளுக்கு தாய்மொழி அவசியம் என்பதனையும் கலைகள் அவா்களிடம் உள்ள வெறுமையை விரக்தியை, விரட்டி அடிக்க உதவும் என்ற உண்மையும் உணரத் தலைப்பட்டனா். அதன் விளைவாக நடன வகுப்புக்கள், இசைவகுப்புக்கள் ஓவிய வகுப்புக்கள் என பல உருவாகின.

இந்த வகுப்புகள் மூலம் அடுத்த கட்ட வளா்ச்சி யோ்மனியில் தமிழ்மக் களிடையே ஏற்பட்டது. விழாக்கள் இப்போ முத்தமிழ் விழாக்களாக மாறின. தாயகத்தின் விடுதலைக்கான களமாகவும், கலைகள் இங்கு செயற்பட்டன. யோ்மனியில் தமிழ் மக்கள் பரந்து வாழ்வதன் காரணமாக 200கி.மீ முதல் 500 கி.மீ வரை கடந்து கலை வளா்த்தனா்

பரதக்கலையை யோ்மனியில் ஆரம்ப காலத்தில் வளரத்த பெருமைக் குரியவா்களுள் மிக நீண்டகாலமாக, இன்றும் தொடரும் சிலரை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். திருமதி வானதி தேசிங்குராஜா, திருமதி.சாவித்திரி இமானுவேல், திருமதி.ரெஜினி சத்தியகுமார்.திருமதி அமலா அன்ரனி சுரேஷ்குமார் போன்றோா் பரதக்கலையை விடுதலைக் காகவும் விதைத்தவா்கள்.

அன்று மிருதங்கக் கலையை யோ்மனியில் வளா்க்க பாடுபட்டவா்களில் தாயகத்தில் வானொலி புகழ் அமரா் சங்கீதபூசணம் சண்முகரத்தினம் அவா்களின் புதல்வன் சண்முகரட்ணம் பிரணவநாதன் அவா்கள் குறிப்பிடத்தக்கவா்..

சங்கீதம் வளர உழைத்தவா்கள் (வாய்ப்பாட்டு) அமரா் செல்வராஜா திருமதி கலைவாணி ஏகானந்தராஜா, திருமதி தா்மினி தில்லைநாதன் மற்றும் திரு.சி.கண்ணன்,ஆகியோா் குறிப்பிடத்தக்கவா்கள்.

தொடர்ச்சி 11ம் பக்கம்.







வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
-கவிஞர்.வி.க
ஓசை 259



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333
e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276

# ஜெனீவா அறிக்கை: நீதியைப் பெற்றுத் தருமா?

## இலங்கை அரசின் காலங்கடத்தும் உத்தி இன்னும் தொடருமா?

– பாரதி.

ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 37 ஆவது கூட்டத் தொடர் இலங்கைக்கு கடுமையான ஒரு எச்சரிக்கையைக் கொடுத்திருக்கின்றது. இது வழமையான எச்சரிக்கைகள் போல சென்றுவிடுமா அல்லது, பொறுப்புக் கூறலை உள்ளடக்கிய நிலை மாறுகால நீதிப் பொறிமுறையை உருவாக்கு வதற்காக இலங்கை அரசு அர்த்தபுஷ்டியான செயற் பாடுகளை முன்னெப்பதற்கான அழுத்தமாக இருக்குமா?

இலங்கையைப் பொறுத்தவரை, தமது கடப்பாடுகள் அனைத்தையும் செய்வதாக வாக்குறுதி கொடுப்பதும், அவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்து பேச்சு வார்த்தைகளை நடத்தி சர்வதேசத்துக்கு நம்பிக்கையைக் கொடுப்பதும், பின்னர் எதனையும் செய்யாமல் காலத்தைக் கடத்துவதும்தான் அவர்களின் தந்திரோபாயம்.இந்தத் தந்திரோபாயம் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் "ஹுசேனின் கண்டனத்தை இம்முறை பெற்றிருக்கின்றது.

"இலங்கை எம்முடன் ஒத்துழைக்கின்றது. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எம்முடன் ஆராய் கின்றது. ஆனால், அவற்றை வேகமாக நடை முறைப் படுத்த எந்த நடவடிக்கைகளும் எடுப்பதில்லை" என்பது அல் "ஹுசேனின் ஆதங்கமாக அங்கு வெளிப்பட்டது. இலங்கை அரசின் காலங்கடத்தும் உத்தியை அவர் புரிந்துகொண்டிருப்பதை இது காட்டுகிறது. இதனால்தான், "எந்த சட்ட வரைவுகளும் செய்யப்படாத நிலையிலும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையிலும், 2019 மார்ச் மாதத்துக்குள் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது சந்தேகமே" என தனது ஏமாற்றத்தை அவர் பதிவு செய்திருக்கின்றார்.

இந்த இடத்தில்தான் அவர் தன்னுடைய யோசனையையும் முன்வைக்கின்றார். "இலங்கை அரசாங்கத்தின் இந்த காலங்கடத்தும் போக்கு, மோசமான குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்கான, சிறப்பு நீதிமன்றத்தை அனைத்துலக நிபுணர்களின் ஆதரவுடன் நிறுவ வேண்டும் என்ற வாதத்தை பலப்படுத்துகிறது. அத்தகையதொரு பொறி முறை இல்லாத நிலையில், நாம், உலகளாவிய அதி காரத்தைப் பயன்படுத்துவதற்கு உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுக்கிறோம்" என அவர் குறிப்பிடுகின்றார். தன்னுடைய அறிக்கையின் இறுதிப்பகுதியில் அவர் இதனைக் குறிப்பிட்டிருப்பது இலங்கை விவகாரத்தில் அவர் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்திருக்கின்றார் என்பதைக் காட்டியது.

2015 ஆம் ஆண்டு ஜெனீவாவில் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடை முறைப்படுத்துவதற்கு கடந்த (2017) மார்ச்சில் மேலும் இரு வருடகால அவகாசம் இலங்கைக்கு வழங்கப் பட்டது. இன்னும் ஒரு வருடம் மட்டுமே உள்ள நிலையில், இடைக் கால மதிப்பீடாகவே இப்போதைய ஜெனீவா கூட்டத் தொடரை நோக்கலாம். இந்த இடைக்கால மதிப்பீடு, அடுத்த மார்ச் மாதத்துக்குள் என்ன நடைபெறும் அல்லது நடைபெறாது என்பதைக் கணிபிடுவதற்கான ஒரு பொறிமுறை. தாம் ஏதோ செய்ததாகக் காட்டிக்கொள்ள இலங்கை அரசும் ஜெனீவாவில் முயன்றது. வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனை கூட்டத் தொடரில் கலந்துகொண்டு இலங்கையின் நிலைப்பாட்டை விளக்கினார். ஆனால், பேரவையின் பெரும்பாலான உறுப்பு நாடுகள் இலங்கையின் போக்கை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. ஜெனீவாவில் அந்த நாடுகள் எடுத்த நிலைப்பாடு அதனை உணர்த்தியது.



செயிட் ராட் அல்ஹுசேன்

இந்த நிலையில், சர்வதேச அரங்கில் இலங்கை மீண்டும் பலவீனப்பட்டுப்போயுள்ளதையே இம்முறை ஜெனீவாவில் காணமுடிந்தது.

"இலங்கை பன்முகத் தன்மையைக் கொண்ட ஒரு நாடு எனவும், அனைத்து இன மக்களுக்கும் இங்கு சம உரிமை உள்ளது" எனவும் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனை ஜெனீவாவில் தெரிவித்திருந்தாலும் கூட, இலங்கையில் இடம்பெறும் சம்பவங்கள் அதற்கு முரணாகவே இருப்பதை உறுப்பு நாடுகள் சுட்டிக்காட்டி யிருக்கின்றன. குறிப்பாக, முஸ்லிம்களுக்கு எதிராக அண்மையில் இடம்பெற்ற தாக்குதல்கள் தற்செயல் நிகழ்வல்ல என்பதையே பல நாடுகளும் பதிவு செய்திருந்தன. அத்துடன், நிலைமாறுகால நீதிப் பொறி முறையின் முக்கிய அம்சமான மீள நிகழாமையை உறுதிப்படுத்த அரசாங்கம் தவறியிருப்பதையும் இது உணர்த்தியது.

இந்த நிலையில் "மாற்று வழிகளைப் பார்க்க வேண்டும்" என மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்திருக் கின்றார். இதற்காக இரு மாற்று யோசனைகளையும் உறுப்பு நாடுகளின் பரிசீலனைக்கு அவர் முன்வைத் திருக்கின்றார். பொறுப்புக் கூறலை இலங்கை அரசாங்கம் தட்டிக்களித்தால் ஆபத்தான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதற்கான எச்சரிக்கையாகவே இது உள்ளது. இலங்கைக்கு இன்னும் ஒரு வருடகால அவகாசம் இருக்கின்றது. அதற்கு முன்னர் தெளிவான கால அட்டவணை ஒன்றின் அடிப்படையில் அரசாங்கம் செயற்பட வேண்டிய தேவை இருப்பதை "ஜெனீவா 2018" உணர்த்தியிருக்கின்றது.

ஆனால், மேற்கு நாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட்டே பெருமளவுக்குச் செயற்படும் மனித உரிமைகள் பேரவை, தற்போதைய மைத்திரி - ரணில் அரசாங்கத்துக்கு கடுமை யான ஒரு நெருக்கடியைக் கொடுக்குமா என்ற கேள்வி இந்த இடத்தில் எழாமல் இல்லை. மேற்கு நாடுகளின் ஆதரவுடன் அமைக்கப்பட்டதுதான் இந்த அரசாங்கம். சர்வதேச அரங்கில் மகிந்த காலத்தில் இருந்த நெருக்கடி மைத்திரி - ரணில் காலத்தில் இருக்கவில்லை. இந்த அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவை மேற்கு நாடுகளுக்கு உள்ளது. அதனால், ஒரேயடியாக அரசுக்கு நெருக்கடியைக் கொடுக்கவும் ஐ.நா. தயாராகவில்லை. அடுத்த மார்ச் மாதத்துக்கு முதல் எதனையும் செய்துவிட முடியாது என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.


ஜெனீவாவில் இடம்பெற்றிருக்கும் நிகழ்வுகள் தமக்கு ஒரு நம்பிக்கை சிறிய ஒளிக்கீற்றைக் கொடுத்திருப்பதாகவே பாதிக்கப்பட்ட மக்கள் கருதுகின்றார்கள். இது வெறுமனே காணல் நீரா அல்லது தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கும் நீதி கிடைக்குமா என்பதை அறிய இன்னும் ஒரு வருடம் நாம் பொறுத்திருக்கத்தான் வேண்டும்!




Akshaya Tritiya
Only on 18 April 2018
Free Gold Coin
E.S.T
ESTM Jewellery
Rheinische Str.73a
44137 Dortmund
Tel: 0231 1899023
Mobil:0163 3642642
அன்பான வாடிக்கையாளர்களே
அட்ஷய திருதியை முன்னிட்டு 2018
500€ தங்க நகை வாங்குவோருக்கு
லக்ஷ்மி பென்ரன்
1000€ வாங்குவோருக்கு
1 தங்க நாணயம் வழங்கப்படும்
7 தங்க நாணயம் சேர்த்து வருவோருக்கு
1 பவுண் தங்க நகை அன்பளிப்பாக வழங்கப்படும்
முடிவு திகதி 31.12.2018




எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்


வெற்றிமணி வெள்ளிவிழா
ஆனிமாதம் ஆரம்பம்
1994 - 2018/2019
25
வெற்றிமணி விழா
16.06.2018 சனிக்கிழமை
மாலை:3.49
மண்டபம்
Dorfgemeinschafts House
Provinzial str.01
Hückolhovon,Dovern,
Kreis Heinsberg,
VETTIMANIY SHOW
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
0163 199 2 333

ஸ்டீபன் ஹாக்கிங்கின்

# காதல் கதைகளும், அனுபவித்த வதைகளும்!



காம்ப்ரிட்ஜில் தனது படிப்பைத் தொடங்கிய சில நிமிடங்களில் தான் முதன் முறையாக தனது வருங்கால துணையை கண்டார் ஸ்டீபன் ஹாக்கிங். ஒரு அறிவார்ந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் ஹாக்கிங். இவரது அப்பா ஒரு மருத்துவ ஆராய்ச்சியாளர், அம்மா பொருளாதாரம் படித்தவர். கணக்கும், அறிவியலும் ஹாக்கிங் இரத்தத்தில் ஊறிய விஷயம். தனது 17வது வயதில் (1959ல்) ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தில் நுழைகிறார் ஸ்டீபன் ஹாக்கிங். ஹாக்கிங்கிற்கு அவர் தேர்வு செய்த துறை சார்ந்த கல்வி பயில பெரும் சிரமங்கள் எதுவும் இல்லை. ஆகையால், படிக்கும் நேரத்தை காட்டிலும் நிறைய நேரம் பலருடன் பழகுவதில் செலவழித்தார். அப்படி இருந்தும் ஹாக்கிங் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பிறகு, அடுத்த மூன்றாண்டில் டாக்ட்ரேட் பயில துவங்கினார்.

புத்தாண்டு கொண்டாட்டம்! அன்று காம்ப்ரிட்ஜில் புத்தாண்டு கொண்டாட்டம். அப்போது ஜேனை சந்திக்கிறார் ஹாக்கிங். ஜேன் ஹாக்கிங்கின் சகோதரிகளில் ஒருவரின் தோழி. அவர் இலக்கியம் படித்து வந்த மாணவி ஆவார். அறிமுகமான குறுகிய காலக்கட்டத்தில் ஹாக்கிங்கும், ஜேனும் அதிகம் சந்தித்துக் கொள்ள துவங்கினார்கள். அவர்களது பெரும்பாலான சந்திப்புகள் கல்வி சார்ந்திருக்கவில்லை. இருவர் மத்தியிலும் காதல் ஊற்றேடுகிறது.

அதிர்ச்சி! ஹாக்கிங் ஆக்ஸ்போர்டில் தனது கடைசி ஆண்டை கழித்து வந்த போதுதான். அவரிடம் சில விசித்திரமான அறிகுறிகள் தென்படுகின்றன. அவர் படிஇறங்கி வரும் போது வினோதமான முறையில் இறங்கி வருவார். அவரது உடலில் ஏதோ மாற்றங்கள் தென்பட்டன. உறவினரும், நண்பர்களும் அவரை உற்று கவனிக்க துவங்கினார்கள்.

பரிசோதனை!

1962ன் இறுதி அது, ஹாக்கிங் மருத்துவ பரிசோதனைக்கு சென்றார். அப்போது தான் அவருக்கு இருக்கும் உடல்நலக் கோளாறு கண்டறியப்பட்டது. ஹாக்கிங்கை பரிசோதனை செய்த மருத்துவர்கள், இவரது ஆயுட்காலம் மிகவும் குறைவு, அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள் தான் தாக்குப்பிடிப்பார் என்று கை விரித்தனர்.

ஜேன்!

இத்தகைய நேரத்தில் எந்தவொரு பெண்ணாக இருந்தாலும், அந்த ஆணை விட்டு விலக தான் நினைப்பால். ஆனால், ஜேன் ஹாக்கிங்குடன் இருக்கவே விரும்பினார். அவருடன் எப்போதும் உறுதுணையாக இருந்தார். ஹாக்கிங்கை, அவரது உடல்நல குறைபாடு அறிந்த பிறகு தான் திருமணம் செய்துக் கொண்டார் ஜேன்.

கடன் வாங்கிய பொழுதுகள்...

ஹாக்கிங்... தான் ஜேனுடன் கடன் வாங்கப்பட்ட நேரத்தை செலவழித்து வாழ்ந்து வருவதாக கருதினார். எப்போது வேண்டுமானாலும் தன் முடிவு நெருங்கலாம் என்ற எண்ணம் அவருக்குள் இருந்தது. ஜேனுக்கு தான் ஹாக்கிங்கின் மூன்று குழந்தைகள் பிறந்தனர். ஆரம்பத்தில் ஊன்றுகோல் கொண்டு நடந்து வந்த ஹாக்கிங்கின் உடல்நலம் கொஞ்சம், கொஞ்சமாக பாதிப்படைந்து வந்தது. 1969ல் அவர் முழுமையாக சக்கர நாற்காலியில் தான் இனி என்ற நிலைக்கு தள்ளப்பட்டார்.

முக்கிய காரணம்...

மருத்துவர்கள் கூறிய இரண்டு ஆண்டுகளை கடந்து, ஹாக்கிங் நீண்ட காலம் வாழ்ந்ததற்கு காரணம் ஜேன் தான். அவரது காதலும், அரவணைப்பும் தான் ஹாக்கிங் அறிவியலில் பல சாதனைகள், கண்டுபிடிப்புகள் நிகழ்த்த முக்கிய பங்காக இருந்தது. அவர் ஹாக்கிங்கை மிகுந்த அக்கறையுடன் பார்த்துக் கொண்டார்.

எழுத்தும், குரலும்!

1975ல் மெல்ல, மெல்ல ஹாக்கிங்கின் எழுதும் திறன், மற்றும் பேசும் திறன் குறைய துவங்கியது. அந்த ஆண்டின் இறுதியிலேயே அவர் பேச்சு யாராலும் புரிந்துக் கொள்ள முடியாத நிலைக்கு ஆளானது. எழுதவும் முடியாமல் போனார் ஹாக்கிங். பிளாக் ஹோல் குறித்து ஹாக்கிங் ஆய்வு செய்துக் கொண்டிருந்த காலம் அது.

மரணத்தை நெருங்கினார்...

1985ல் நிமோனியா தாக்கம் ஏற்பட்டு லைப்-சப்போர்ட் நிலைக்கு தள்ளப்பட்டார் ஹாக்கிங். ஜேன் அவரை விட்டு விலக தயாராய் இல்லை. அவர் இறக்கும் வரை உடன் இருப்பேன் என்று உறுதியுடன் இருந்தார். ஜேனின் காதல் மற்றும் மருத்துவர்களின் சிகிச்சையால் ஹாக்கிங் மீண்டு வந்தார்.





நேரத்தின் வரலாறு..

நிமோனியாவில் இருந்து மீண்டு வந்த ஹாக்கிங் 1988ல் தனது "எ பிரீஃப் ஹிஸ்டரி ஆப் டைம்"ஐ வெளியிட்டார். அந்த காலக்கட்டத்தில், அதிக விற்பனையாகி பெரும் சாதனைப் படைத்தது. ஹாக்கிங்கின் அந்த சாதனை மற்றும் புகழ், ஜேனை பெரும் மகிழ்ச்சியடைய செய்தது.

விவாகரத்து!

ஆனால், ஹாக்கிங் - ஜேன் இல்லற வாழ்க்கை அப்படியே தொடரவில்லை. இவர்கள் இருவரும் பிரியும் தருணம் உருவானது. தனக்கு பேச்சை வெளிப்படுத்தம் கருவியை (Speech Synthesiser) உருவாக்கி தந்த தேவின் மேசன் என்பவரின் மனைவியும், நர்சுமான எலைன் என்பவரை திருமணம் செய்துக் கொண்டார்.

யார் இந்த எலைன் மேசன்?

எலைன் மேசன் ஹாக்கிங்கை கவனித்துக் கொள்வதற்கு முன்னர் வங்காளதேசத்தில் பணிபுரிந்து வந்தவர் என்று அறியப்படுகிறது. இவர் பிறகு, ஹாக்கிங்கின் ரசிகரும், மருத்துவருமான டேவிட் மேசன் என்பவரை திருமணம் செய்துக் கொண்டார். ஹாக்கிங்கை கவனித்து வந்த போது இவர்கள் இருவருக்கும் இடையே காதல் உண்டாகி, பிறகு ஹாக்கிங் ஜேனை பிரிந்த பின் திருமணம் செய்துக் கொண்டார்கள்.

விவாகரத்து!

எலைன் மற்றும் ஹாக்கிங்கின் திருமண வாழ்க்கையும் 11 ஆண்டுகளில் (2006ல்) முடிவுக்கு வந்தது. இவர்களது விவாகரத்துக்கான காரணாம் தெளிவாக இல்லை. எலைன் தரப்பில், ஹாக்கிங் பிற பராமரிப்பாளர்களுடன் பழகி தன்னை ஏமாற்றிவிட்டார் என்று கூறப்பட்டது. இதை ஹாக்கிங்கின் செயலாளர் வன்மையாக மறுத்தார்.

தொடர்ச்சி 19ம் பக்கம்...



# நமது உடலுக்குள் மாபெரும் நெடுஞ்சாலை இருக்கிறது தெரியுமா?



Dr.நிரோஷனின்





அதிசய உலகம்

ஒரு நகரத்திலிருந்து ஒரு நாட்டில் இருக்கும் எல்லா நகரங்களையும், அத்தோடு அடுத்தடுத்த நாடுகளையும் அடைவதற்கு அமைக்கப்பட்ட சாலைகளை நாம் „Highway" அல்லது தமிழில் நெடுஞ்சாலை என்று அழைக்கின்றோம். இந்த நெடுஞ்சாலைகள் மனிதன் படைத்த மிகப் பெரிய சாதனைகளில் ஒன்று என்று கூட சொல்வார்கள், சரி தானே? ஆனால், உங்களால் கற்பனையே பண்ண முடியாத பிரம்மாண்டமான, மாபெரும் நெடுஞ்சாலை ஒன்று இருக்கிறது. அது வேறு எங்கும் இல்லை, உங்கள் உடலுக்குள்ளே இருக்கிறது என்று சொன்னால் நம்புவீர்களா?

அடடா, இது என்ன மாபெரும் நெடுஞ்சாலை நமது உடலுக்குள் இருக்கிறது என்று யோசிக்கின்றீர்களா? உங்கள் ஒவ்வொருவரிலும் அடங்கி இருக்கும் அந்தச் பிரம்மாண்டமான நெடுஞ்சாலை வேறொன்றும் இல்லை, உங்கள் உடல் பூராகவும் படர்ந்து பரவியிருக்கும் இரத்த நாளங்களின் வலையமைப்புத் தான் அந்த நெடுஞ்சாலை ஆகும். இந்த வலையமைப்பின் ஊடாக நமது இதயம் தொடர்ச்சியான சீரான முறையில் சுருங்கி விரிந்து நமது உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்பிற்கும், ஏன் ஒவ்வொரு உயிரணுவிற்கும் (Cell) இரத்தத்தை அனுப்புகின்றது. அட இதில் என்ன அதிசயம் இருக்கிறது என்று கேட்கின்றீர்களா…? ஒரு மனிதனின் உடம்பில் இருக்கும் அனைத்து இரத்த நாளங்களையும் எடுத்து ஒன்றுடன் ஒன்று இணைத்தால், அந்த நாளத்தின் நீளம் சுமார் 100,000km கும் அதிகமாக இருக்கும். சரி, இந்த நீளத்தை உங்களால் கற்பனை பண்ண முடியவில்லை என்றால், இதற்கு வேறு விளக்கம் தருகிறேன்.

பூமியின் சுற்றளவு சுமார் 40,074 km ஆகும். அப்படியென்றால் இந்த இரத்த நாளங்களுடன் நமது பூமியை 2.5 முறை சுற்றலாம் என்பது தான் இதில் உள்ள ஆச்சரியம் ஆகும். நம்பவே முடியவில்லை அல்லவா?

பொதுவாக ஒரு சராசரி மனிதனின் உடலில் சுமார் 4-6 லிட்டர் இரத்தம் இருக்கும். இதில் உள்ள அதிசயம் என்ன தெரியுமா? நமது இதயம் இரத்தத்தை மிகவும் வேகமாக, குறிப்பாக 1.1 m/s அல்லது 4 km/h வேகத்தில் நமது உடலூடாக அனுப்புகிறது. இப்படி அனுப்பப்படும் இரத்தம் ஒரு முறை நமது உடலூடாகச் சுற்றி வர வெறும் ஒரு நிமிடம் தான் எடுக்கும். இதுவே உடலுக்கு வேலை கொடுக்கும் போது, இன்னும் வேகமாகச் சுற்றி வரும். எனவே இப்படி ஒரு மாபெரும் அதிசயத்தை உங்கள் உடலுக்குள்ளே வைத்துக்கொண்டு வெளியே அதிசயங்களைத் தேடவேண்டாம்! என்ன, நான் சொல்வது சரி தானே? இந்த மாபெரும் அதிசயத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh)

## விரல் சொடுக்கும் போது ஏன் சத்தம் கேட்கிறது?



விரல் சொடுக்குவது, நெட்டி முறிப்பது அல்லது „cracking your knuckles" என்று சொல்வார்களே, அதை நிச்சயமாக உங்களில் சிலரும் கூட வழக்கமாகக் கொண்டிருப்பீர்கள். சரி தானே? பொதுவாக விரல் சொடுக்கும் போது ஏதோ எலும்புகள் எல்லாமே முறிவது போல் ஒலி கேட்கும். ஆனால் இந்த விரல் சொடுக்கலுக்குப் பின்னால் இருக்கும் மர்மம் என்ன? நாம் விரல்களைச் சொடுக்கும் போது ஏன் சத்தம் வருகிறது என்று எப்பொழுதாவது சிந்தித்துப்பார்த்திருக்கின்றீர்களா?

விரல் சொடுக்குவது என்றால் என்ன? சிலர் ஒவ்வொரு விரலின் முனையையும் நீட்டி இழுத்துச் சொடுக்குவார்கள், வேறு சிலர் தங்கள் முட்டியை இறுக்கமாக மூடி அல்லது ஐந்து விரல்களையும் பின்னோக்கி வளைத்து எல்லாம் விதம் விதமான வித்தைகள் காண்பித்து நெட்டி முறிப்பார்கள். இப்படிச் செய்தால் தான் அவர்களுக்கு நிம்மதி அல்லது சுகம் கிடைக்கின்றது என்று கூறுகின்றார்கள். 25 முதல் 54 சதவீத மக்கள், அதிலும் குறிப்பாக பெண்களை விட ஆண்களே அதிகமாக நெட்டி முறிக்கின்றார்கள்.

இது எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால் அப்படி விரல் சொடுக்கும் பொழுது வரும் அந்தச் சத்தம் எவ்வாறு தோன்றுகிறது? இதற்குரிய பதிலை கண்டுபிடிக்க 1947ம் ஆண்டிலே ஆரம்பித்து விட்டார்கள். அன்றிலிருந்து பல்வேறு ஆராய்ச்சி குழுவினர் வெவ்வேறு காரணங்களை முன்வைத்தார்கள், ஆனால் இதில் சரியான விளக்கம் எது என்பது யாராலும் சொல்ல முடியவில்லை. எனவே இந்த மர்மத்துக்குப் பின்னால் இருக்கும் உண்மையைக் கண்டு பிடித்தே ஆகவேண்டுமென்று நினைத்து ஒரு புதிய முயற்சியை ஆரம்பித்தார்கள். „Pull my finger study" எனும் பெயரில் அல்பேர்ட்டா பல்கலைக்கழகத்தில் (University of Alberta) ஒரு புதிய பரிசோதனை ஒன்றைச் செய்தார்கள். அது எப்படி என்றால் ஒரு நபரை விரல் சொடுக்கச் சொல்லிவிட்டு அவர் சொடுக்குவதை காந்த அதிர்வு அலை வரைவு அதாவது ஆசுஐ என்று அழைக்கப்படும் „Magnetic Resonance Imaging" ஊடாக அந்தச் சம்பவத்தை அவதானித்தார்கள். அப்பொழுது தான் ஆராய்ச்சியாளர்களுக்கு உண்மை தெரிய வந்தது. நமது மூட்டுகளுக்கிடையே Synovial Fluid என்று அழைக்கப்படும் ஒரு நீர்மம் உள்ளது. விரல் சொடுக்கும்போது ஒரு குறுகிய நேரத்தில் நமது மூட்டு இணைப்புகளுக்கு இடையே 2,3-4,5 அஅ அளவான ஒரு இடைவெளி ஏற்படுகின்றது. அப்படி ஏற்பட்ட அந்த இடைவெளிக்குள் உடனடியாக அந்த நீர்மம் செல்லமுடியாததால் வெற்றிடம் ஏற்படும் போது தான் அந்தச் சத்தம் கேட்கின்றது. அவ்வளவு தான்! இது தான் இந்த மர்மமான விஷயத்துக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் விளக்கம் ஆகும்.ஆனால் இன்று வரை, ஏன் இந்த ஆராய்ச்சியின் ஊடாகக்கூட, தெரியாத விஷயம் என்ன தெரியுமா? இப்படி விரல் சொடுக்குவது உடலுக்கு நல்லதா இல்லை தீங்கானதா என்பது தான் இன்னும் தெரியாத விஷயம் ஆகும். எனவே, அதற்கும் விரைவில் பதிலை கண்டறிவார்கள் என்று நம்புவோம்.

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளளோம்





www.Nandys.de
e.mail:info@nandys.de

# எதிரியின் வாயிலிருந்தும் நான்கு நல்ல வார்த்தைகள்!




ஜூட் பிரகாஷ் (மெல்பேர்ண்)



குற்றங்கள் இழைத்த இலங்கை இராணுவத்தின் மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவின் எழுதிய "Road to Nandikadal" புத்தகம் ஆறேழு மாதங்களிற்கு முன்னர் வாசிக்க தொடங்கியது. "ஆமிக்காரன் எழுதின புத்தகத்தை ஏன் வாசிக்கிறீர்.. உமக்கென்ன விசரா" என்று புத்தகத்தை திறந்த நாளிலிருந்து மனிசி நச்சரித்துக் கொண்டே இருந்தா.

எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து யுத்தத்தின் இறுதிவரை இலங்கை இராணுவத்தில் பணியாற்றிய ஒரு இராணுவ அதிகாரி அப்படி என்ன தான் எழுதியிருக்கிறார் என்ற ஆவலில் தான் வாசிக்க தொடங்கினேன். பக்கம் பக்கமாக வாசித்துக் கொண்டு போக, கடைசி சில அத்தியாயங்களை தவிர, மிகுதி அத்தியாயங்கள் எல்லாம் விடுதலைப் புலிகள் அரங்கேற்றிய வீரகாவியத்தின் சாட்சியங்களின் பதிவாகவே எனக்கு தெரிந்தது. எதிரியின் பதிவிலிருந்து எங்களது விடுதலைப் போராட்டம் உச்சம் பெற்றிருந்த காலத்தை மீண்டும் ஒருமுறை நினைவூட்டி நனவிடை தோய்தலில் திளைக்க வாய்த்த சந்தர்ப்பமாக இந்த புத்தகத்தை வாசித்த அனுபவம் அமைந்தது.

முப்பது வருடகால யுத்ததில் இடம்பெற்ற அனைத்து முக்கிய தாக்குதல்களும் அரசியல் நிகழ்வுகளும் பதிவாகியுள்ள இந்தப் புத்தகத்தில், 1990 மாங்குளம் முகாம் மீதான தாக்குதலையும் 1991 சிலாவத்துறை முகாம் மீதான தாக்குதலையும் புத்தகாசிரியர் விவரித்த பாணி அலாதியானது. குறிப்பாக முற்றுகைக்குள்ளான மாங்குளம் முகாமிலிருந்து தப்பி கால் நடையாக வவுனியாவை அடைந்த இலங்கை இராணவத்தினர், அந்தப் பயணத்தில் அனுவதித்த சோதனைகளையும் அவர்களுக்குள் எழுந்த முரண்பாடுகளையும் ஒரு திரைப்படமாகவே எடுக்கலாம்.

"எங்கட குறூப் கடற்கரையில் தான் படுத்திருந்தனாங்க.. சரியா எங்கட முதுகுக்கு மேலால தான் ஹெலி போய் உயஅிக்குள் இறங்கினது" 1991ம் ஆண்டு சிலாவத்துறை இராணுவ முகாம் மீதான தாக்குதலில் பங்குபற்றிய நண்பனொருவர் தனது நினைவுகளை மீட்டுக் கொண்டார்.

" கடலோட தொட்டுக் கொண்டு.. மேலால பறந்து வந்து, அன்றைக்கு மட்டும் அந்த ஹெலி அவங்களுக்கு சாமான் இறக்காமல் இருந்திருந்தால், கதை வேற" என்று அவர் சொல்லிக் கொண்டு போனார். சிலாவத்துறை தாக்குதலில் திருப்புமுனையாக அமைந்த இந்த சம்பவம் இலங்கை இராணுவத்தின் தளபதியான மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவின் புத்தகத்திலும் நண்பர் விவரித்த மாதிரியே பதிவாகியுள்ளது.

எங்களிற்கு இயக்கம் என்றால் அண்ணாமாரும் அக்காமாரும், மச்சான்மாரும் மச்சாள்மாரும் நண்பர்களும் தோழிகளும் தான். அதனால் தான் யாரும் இயக்கத்தை பற்றி பிழையாக கூறும் போதோ அல்லது இயக்கத்தை குற்றம் சாட்டும் போதோ, எம்மால் ஏற்கவும் முடிவதில்லை சகித்துக் கொண்டு இருக்கவும் முடிவதில்லை.

1990 யாழ்ப்பாண கோட்டை முற்றுகையை உடைக்க இலங்கை இராணுவத்தினர் பட்ட பாட்டையும் இந்த புத்தகம் விரிவாக பதிவுசெய்கிறது. முற்றுகை முறியடிப்பு தாக்குதல் ஒன்றில், யாழ்ப்பாணம் பிரதான வீதி வழியாக உடைத்துக் கொண்டு முன்னேற முற்பட்ட இராணுவ அணிக்கு சரத் பொன்சேகாவும், யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை பக்கமாக முன்னேற முற்பட்ட அணிக்கு கோதபாயவும் தலைமை தாங்கினார்களாம்.

1990களின் இறுதியிலும் 2000களின் ஆரம்பத்திலும் ஓயாத அலைகள் தாக்குதல் நடவடிக்கைகளின் தாக்கத்தாலும், கட்டுநாயக்க விமானப் படைத்தளம் உட்பட தென்னிலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்களாலும், தமிழீழம் மலர்வதை தடுக்க முடியாது என்ற விரக்தியடைந்த மனநிலையில் இலங்கை இராணுவம் இருந்ததை வாசித்த பக்கங்கள் வலி மிகுந்தவை, பெரு மூச்சை வரவைத்தவை.

2002ம் ஆண்டு தொடங்கிய சமாதான காலத்தில், இலங்கை இராணுவம் சந்தித்த அவமானங்களை கமால் குணரத்ன கோபத்தோடு பதிவு செய்கிறார். உயர் பாதுகாப்பு வலயங்களை குறைப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளோடு இலங்கை இராணுவ தளபதிகள் சரிசமமாக இருந்து பேசியதை இழிவாக கருதும் கமால் குணரத்ன, இராணுவக் காவலரண்களில் போராளிகளாலும் பொதுமக்களாலும் இராணுவத்தினர் கேலிக்கு உட்பட்ட நிகழ்வுகளையும் பதிவு செய்கிறார்.

2006ல் முகமாலையில் இறுதியுத்தம் தொடங்கிய போது, முதலில் இயக்கத்தின் கை தான் ஓங்கியிருந்தது என்பதையும், அந்த தீரச் சமரை தலைமை தாங்கிய தளபதி தீபனின் இராணுவ நுணுக்கங்களை புகழவும், கமால் குணரத்ன சில பக்கங்களை ஒதுக்கியிருந்தது ஆச்சரியம் அளித்தது. அதே போல் 2000ம் ஆண்டு ஆனையிறவுச் சமரில் தளபதி பால்ராஜ் பற்றியும் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இயக்கம் மன்னாரில் தான் சண்டையை தொடங்கும், ஏனெனில் அங்கு தான் இலங்கை இராணுவம் பலவீனமாக இருந்தது, ஆனால் தாங்கள் மிகப்பரவலாக இருந்த முகமாலையில் சண்டை தொடங்கியது தங்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது என்று, முகமாலைச் சமரை, கமால் குணரத்ன நினைவு கூறுகிறார்.

ஆனந்தபுரம் சண்டை தான், முடிவுறுக்கும் சண்டையாக இருந்தது என்று கருதியிருக்கும் பலரிற்கு, 2009ம் ஆண்டு பெப்ரவரி மாதம், புதுக்குடியிருப்பிற்கு தெற்காக இடம்பெற்ற கடும் சண்டை, எங்கள் தலைவிதியையே மாற்றியிருக்கும் வல்லமை வாய்ந்ததாக இருந்தது என்பது புதிய செய்தி. ஜெயசிக்குறு சமரைப் போல், இந்தச் சண்டையிலும், இராணுவம் சண்டையை கைவிட்டு தப்பியோட தொடங்கி விடுமோ என்று இலங்கை இராணுவ உயர்பீடம் அஞ்சிய கணங்களை கமால் குணரத்ன இந்தப் புத்தகத்தில் பதிவுசெய்துள்ளார்.




திருமணசேவை

ஐரோப்பா ,கனடா, அவுஸ்திரேலியா,
அமெரிக்கா, இலங்கை,
ஆகிய நாடுகளில் இருந்து
மணமகன், மணமகள், உங்கள் பிள்ளைகளுக்கு
ஏற்றவர்களாக தேர்ந்து எடுத்து
உதவுவோம்.

தொடர்பு கொள்ளவும்.
Germany: 00491627462526
Sri lanka: Viber 0094 767250144




Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund

## தானாச் சேர்ந்த கூட்டம் அல்ல! இது உழைப்பால் சேர்ந்த கூட்டம்.










# 14 வது ஆண்டில் ஐரோப்பிய தமிழ் வானொலி உறவுகளின் ஒருங்கிணைவு

யேர்மனியில் ஐரோப்பிய வானொலி (ETR) தனது 14 வது ஆண்டில் தடம் பதிக்குகம் வேளை உறவுகளின் ஒருங்கிணைவு என்ற நேயர்களின் உணர்வுகளின் சங்கமமாக ஒரு நிகழ்வினை 24.02.2018 யேர்மனியில் நடத்தியது. இது விழா என்பதனைவிட ஒரு குடும்ப ஒன்றுகூடல்போல் அமைந்தது என்பதே சரியானதாகும்.

இக்கூட்டம் தானச் சேர்ந்த கூட்டம் அல்ல. ஐரோப்பிய வானொலி அதிபர் திரு.த.ரவிந்திரன் அவர்களின் உழைப்புக்கும் பாசப்பிணைப்புக்கும் சேர்ந்த கூட்டம். இவரின் நிர்வாகத் திறமையும் அவரது பாசமிகு நேயர்களின் அளப்பெரிய அன்பும், குடும்பவிழாவில் சிற்றூண்டி முதல் உபசரிப்புவரை பரந்து இருந்தது.

48 நிகழ்ச்சிகள் அதனால் குறிப்பிட்ட நேரத்திற்கே நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. 500 மேற்பட்ட பார்வையாளர்கள், ஏதோ மலிவுவிற்பனைக் கடையை மொய்த்ததுபோல் குறித்தநேரத்தில் அணிவகுத்து வந்தனர். இது ஐரொப்பிய தமிழ் வானொலிக்கு ஓர் ஆரோக்கியமான நிகழ்வாக அமைந்தது. நேயர்கள் தாமாகக் கொண்டு வந்த பலகாரமும்,நிகழ்வு மண்டபத்தில் தயாரித்த உணவும் பார்வையாளர்களின் பசியைப்போக்க மறுபக்கம் மேடையில் கலைப்பசிக்கு உணவாக பல சிறந்த கலைநிகழ்ச்சிகளும்,பாடல்களும் பட்டிமன்றமும் நடந்து கொண்டு இருந்தன.

### கூழும் கூட்டலுமாய்...

விழா மறுநாள் மண்டபம் கூட்டி இருந்தபடியே ஒழுங்காக ஒப்படைக்க வேண்டும். மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல், மறு நாளும் நேயர்கள் தொண்டர்கள் கூட்டம் அங்கு கூடியது. ஒரு புறம் கூட்டல் வேலை மறுபுறம் வானொலி அதிபர் ரவிமாஸ்டரின் கூழ்காச்சும் படலம். கூழும் கூட்டலுமாய் மறநாள் பொழுது இனிதாக நகர்ந்தது. நாம் கற்கும் விடையங்கள் பல, மேடையில் மட்டும் அல்ல, பார்வை யாளர் களிடமும்தான் என்பதுபோல அங்கு அன்பர்களது செயல்கள் அழகாக அமைந்து இருந்தன.






7ம் பக்கத் தொடர்ச்சி.

யுத்த முன்னரிங்கில் களமாடும் துருப்புக்கள் பின்வாங்கி ஓடாமலிருக்க, ஒரு நாற்சந்தியில் கட்டளைப்பீடத்தை நிறுவிய தனது வீரபிரதாபத்தை புளுகவும் கமால் குணரத்ன மறக்கவில்லை.

"இந்த விசர்ப் புத்தகம் ஏன் இன்னும் இந்த வீட்டில் இருக்கு" போன கிழமை மனிசி மீண்டும் ஆட்டிலெறி அடிக்க தொடங்கினா. "எத்தனை மாசமா உதை வாசிக்கிறீர்.. உதை பார்க்க பார்க்க எனக்கு விசர் விசரா வருது" நியாயமான கோபத்திற்கு பதில் சொல்ல முடியாது திணறினேன். "இன்னும் ஓரே கிழமை தான்.. பிறகு உத குப்பேக்க தூக்கி போட்டிடுவன்" இறுதி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. கமால் குணரத்னவின் "Road to Nandikadal" பற்றி ஒரு Blog எழுத உண்மையிலேயே மனமில்லை. ஆனால் நாங்கள் உச்சத்தில் இருந்த காலத்தைப் பற்றி இந்த புத்தகம் அதிகளவில் பதிவு செய்துள்ளதால் தான் இந்த Blog. அதுவும் எதிரியின் வாயால் நாங்கள் அப்படி இருந்தோம் இப்படி அடித்தோம் என்று கேட்கும் போது வரும் ஆனந்தம், அடுத்த நாள் காலை யாழ்ப்பாணத்து பத்திரகைகளில் குப்பை கூட்டும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களிற்காக நமக்குள் நாமே போடும் சண்டைகளைப் பற்றி வாசிக்கும் போது அஸ்தவனமாகிவிடும்.

ஈழ யுத்தத்தின் தலைவிதியை நிர்ணயித்த சமர்களில் ஒன்றான 2009ம் ஆண்டு பெப்ரவரி மாத புதுக்குடியிருப்பு சமரின் போது, தனது இளநிலை தளபதிகளிற்கு கமால் குணரத்ன கூறிய வார்த்தைகளை வாசித்த பின்பு, நந்திக் கடல் சமர் பற்றிய அவரது இறுதி அத்தியாயத்தை வாசிக்காமலே வாசிப்பை நிறுத்திவிட்டேன்.



# முதுமையில் ஏற்படும் நினைவாற்றல் இழப்பு நோய்




டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

உங்கள் வீட்டிலும் மூளை அசதி
நோய் இருக்கக் கூடுமா?

## Alzheimer's disease

உங்கள் வீட்டில் ஒரு வயதானவர் இருக்கிறார் என வைத்துக் கொள்வோம். அண்மைக் காலங்களாக அவரது வாழ்க்கை முறையில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன என வைத்துக் கொள்வோம்.

மறதி, நினைவுத் தடுமாற்றம், வழமையாக முகம் கழுவுதல் ஸேவ் எடுத்தல் போன்ற பணிகளையும் செய்வதில் சிரமம் ஏற்படுதல்,இப்படியாகப் பல. அத்தோடு அவர் முன்னரைப்போல மற்றவற்றில் ஈடுபாடின்றி ஒதுங்கிப் போவது போன்றவற்றை அவதானிக்க முடிகிறதா?

வயசானால் இப்படித்தான் என அலட்சிப்படுத்தாதீர்கள். ஏனெனில் அது ஒரு நோயாக இருக்கலாம். உதாரணம் வேண்டுமென்றால் Black என்ற ஹிந்தித் திரைப்படத்தில் அமிதாப் பச்சான் நடித்த பாத்திரத்தை நினைவுறுத்துங்கள்.

அடடஸீமர் நோய் (Alzheimer's disease) என்பதை வயதான காலத்தில் ஏற்படும் நினைவிழப்பு மற்றும் சிந்தனைத் திறன் இழத்தல் எனவும் சொல்லலாம். 'முதமையில் ஏற்படும் நினைவாற்றல் இழப்பு நோய்' எனலாம். இது பொதுவாக 65க்கு மேற்பட்டவர்களுக்கே வரும் நோயாயினும் இது மூளையில் ஏற்படும் நோயே அன்றி, வழமையான வயது முதிர்வதின் தாக்கம் அல்ல.

இது படிப்படியாக ஆரம்பித்து மூளையை நலிவடையச் செய்து மீளமுடியாத நிலைக்குச் செல்கின்றது. 'மூளை, அசதி நோய்' எனவும் சொல்கிறார்கள் அதுதான் அடல்ஸீமர் நோய் (Alzheimer's disease). இது வரவர தீவிரமடைந்து செல்கிற நோய். மாற்ற முடியாதது. சிகிச்சைகளினால் அது தீவிரமடைவதைத் தாமதப்படுத்த முடியுமே அன்றி, முற்று முழுதாக நிறுத்த முடியாது. எனவே அல்ஸீமர் நோயை ஆரம்பத்தில் கண்டறிய முயலுங்கள்.

அடடஸீமர் நோயல்லாத வேறு நினைவு மங்கும் நோய்களும் உள்ளன. 'அறளை பெயர்தல்' என்ற சொல் அவற்றிக்குப் பொருந்தலாம். முதமையில் ஏற்படும் மறதி, அறிவாற்றல் இழப்பு, மறதி போன்றவற்றை ஆங்கிலத்தில் (Dementia) என்பார்கள்.



'மூளைத் தேய்வு' என்ற சொல் Dementia ற்கு பொருத்தமாக இருக்கும். இவை வயதாவதால் ஏற்படுபவை. ஆல்ஸீமர் நோய் இந்த நோயைக் கண்டுபிடிப்பதற்கு முக்கியமாக அறிகுறிகள் தாம் உதவுகின்றன.

ஆனால் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிப்பது மிகவும் சிரமமானது. நாளாந்த வாழ்க்கை முறையைக் குலைக்கும். நினைவுத் தடுமாற்றம் அண்மையில் நடந்த சம்பவங்களையும், அறிந்து கொண்ட, கற்றுக் கொண்ட விடயங்களையும் மறந்துவிடுவதுதான் அல்ஸீமர் நோயின் மிக முக்கியமான ஆரம்ப அறிகுறி எனலாம். மிக நெருக்கமானவர்களின் திருமண நாள், பிறந்தநாள் போன்ற முக்கிய தினங்களை மறந்து விடுவதும், மிக முக்கிய சம்பவங்களை நினைவில் காப்பாற்ற முடியாததும் இந்நோயின் ஏனைய அறிகுறிகளாகும்.

மறந்து விடாதிருக்க கலண்டரில் அல்லது டயறியில் குறித்து வைப்பதும், குறித்து வைத்ததையே மறந்துவிடுவதும், மறதியைத் தாண்ட காலத்தோடு சேர்ந்து ஓடும் சில வயதானவர்கள் கணினியை அல்லது வேறு இலத்திரனியல் கருவிகளை நினைவுறுத்துவதற்கு பயன்படுத்துவதுண்டு.

பெயர்களை மறப்பதும், செய்ய வேண்டிய முக்கிய வேலைகளையும், நிகழ்வுகளையும் மறப்பது அல்ஸீமர் நோயின் முக்கிய அறிகுறி எனலாம்.

திட்டமிடுவதிலும் பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும் சவால்களை எதிர்கொள்ளல் ஒரு பணியைத் திட்டமிடுவதிலும், அதை நடைமுறைப்படுத்துவதிலும் இந்நோயின் ஆரம்ப கட்டத்திடட சிலருக்கு சிரமங்கள் ஏற்படலாம். சில்லறைக் கணக்குகள் பார்ப்பதிலும், வழமையான மாதாந்த கொடுப்பனவுகளை செலுத்துவதிலும் பிரச்சனைகள் தோன்றலாம். வழமையான பல செயற்பாடுகளை செய்வதற்கு இப்பொழுது முன்பை விட கூடியளவு நேரம் தேவைப்படலாம். வீட்டிலோ, வேலைத்தளத்திலோ அடடலது ஓய்வின்போதோ நன்கு பரிச்சயமான வழமையான பணியைச் செய்வதில் சிரமங்களை எதிர் கொள்ளல். நாளாந்தக் கடமைகளை செய்து முடிப்பது பல அல்ஸீமர் நோயாளிகளுக்கு கடினமாயிருக்கும். உதாரணத்திற்கு வழமையாகச் சென்று வரும் வங்கி, கோயில், நண்பர் வீடு போன்ற இடத்துக்கான வழியை மறந்து விடுவார்.

தொடர்ச்சி 10ம் பக்கம்

CENTURY Travels GmbH

Rheinische Strasse 29
44137 Dortmund

Steeler Strasse 150
45139 Essen

Emirates

Colombo
ab 699 €-799 €

Sommer Special JULI/ AUGUST


Fon: 0231 557 4319 / 0231 5896 557
Mob: 017621682149 Nishanthan

Emirates

Unsere Services
Mietwagen/ Versicherung/ Pauschalreisen/ Hotels/ Visum Service/ Flughafen Abholung
Email: info@centurytravels.de

09 பக்கத் தொடர்ச்சி

உங்கள் வீட்டிலும் மூளை அசதி நோய் இருக்கக் கூடுமா?




வழமையாக செஸ், சீட்டாட்டம் போன்ற ஏதாவது விளையாடுபவர் அந்த விளையாட்டின் விதிகளை மறந்துவிடக்கூடும். காலம், நேரம், இடம் பற்றிய தடுமாற்றம் பல அல்ஸீமர் நோயாளிகளுக்கு அன்றைய திகதி என்ன?, காலையா, மாலையா அல்லது மாரி, கோடை, காலநிலை போன்றவற்றை நினைவுக்கு கொண்டுவருவதில் குழப்பம் ஏற்படலாம். சில தருணங்களில் தாங்கள் எங்கே இருக்கிறோம் அல்லது எவ்வாறு அவ்விடத்துக்கு வந்தோம் என்றவற்றை மறந்து தடுமாறுவர். உதாரணத்துக்கு இன்று ஞாயிறா திங்களா எனக் குழம்புவார். ஆயினும் பின்னர் நினைவுக்கு கொண்டு வந்துவிடுவார்.

உருவங்களை சூழலுடன் பொருத்திப் பாரப்பதில் ஏற்படும் சிக்கல்கள் ஒரு சிலருக்கு பார்வைக் கோளாறு மட்டுமே அல்ஸீமர் நோயின் முதல் அறிகுறியாக இருக்கலாம். வாசிப்பதிலும் அதனைப் புரிந்து கொள்வதிலும் சிலருக்கு சிரமம் தோன்றும். சிலருக்கு கண்ணில் படும் உருவங்களுக்கு இடையேயான தூரம், நிறவேறுபாடு ஆகியவற்றை வேறுபடுத்தி நிர்ணயிப்பது கஸ்டமாயிருக்கும். உதாரணத்துக்கு முகம் பார்க்கும் கண்ணாடியைத் தாண்டிச் செல்லும்போது அதில் உள்ள விம்பத்தைப் பிரித்தறிய முடியாது வேறு யாரோ அறையில் இருப்பதாக உணரக்கூடும்.

உரையாடுதலிலும் எழுதுவதிலும் புதிய சிக்கல்களை எதிர்கொள்ளல் மற்றவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் அதனைப் புரிந்து கொள்வதும் அதில் இணைந்து கொள்வதும் இவர்கள் பலருக்கும் முடியாதிருக்கும். தான் பேசிக்கொண்டிருக்கையில் அதனை எவ்வாறு தொடர்வது எனப் புரியாமல் பேச்சை நிறுத்துவார். ஆல்லது சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லவும் கூடும். சரியான சொற்கள் வேண்டிய நேரத்தில் வராமல் திணறுவர். உதாரணத்துக்கு டோர்ச் லைட் என்பதை விளக்கு என்றோ, புத்தகம் என்பதைப் பேப்பர் என்பதாகவோ சொல்லக் கூடும்.

பொருட்களை அதற்கான இடத்தில் வைக்காமல் வேறு இடங்களில் வைப்பதும், அவற்றைப் பின்பு கண்டு பிடிக்கத் திணறுவதும் ஒரு பொருளை அதற்கான இடத்திடட வைக்காது பொருத்தமற்ற இடத்திடட வைப்பது அல்ஸீமர் நோயின் மற்றொரு ஆரம்ப அறிகுறியாகும். உதாரணமாக பர்சில் வைக்க வேண்டிய பணத்தை மூக்கு கண்ணாடி உறையில் வைப்பார். யாராவது அதனைத் திருடிவிட்டதாக குற்றம் சாட்டக்கூடும்.

காலம் செல்லச் செல்ல தீர்மானம் எடுப்பதில் சிரமம் அல்ஸீமர் நோயாளிகள் சரியான தீர்மானம் எடுப்பதில் சிரமப்படுவார்கள். தவறான முடிவு எடுக்கவும் கூடும். ஊதாரணமாக பெருந்தொகை பணத்தை தவறான நபருக்கு கொடுக்க திடீரென முடிவு எடுக்கக் கூடும். குளிப்பது, முகம் கழுவுவது, சுத்தமான ஆடைகள் போன்றவற்றில் கவனம் செலுத்தாமல் இருப்பர். தனது சுத்தத்திலும், வீடு படுக்கை போன்றவற்றின் சுத்தத்திலும் அக்கறையற்று இருப்பார். தொழில் மற்றும் சமூகக் கடமைகளில் இருந்து ஒதுங்கக் கூடும் ரிவி பார்ப்பது, பத்திரிகை, புத்தகம் படிப்பது, விழாக்களுக்கு செல்வது, நண்பர்களுடன் பொழுது போக்குவது போன்ற தனது வழமையான நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கக்கூடும்.கட்டாயம் செல்ல வேண்டிய திருமணம், மரணவீடு ஆகியவற்றுக்குச் செல்வதிலும் அக்கறையற்று இருப்பது சகசம். அவரது வழமையான மனநிலை, குண இயல்பு மாற்றம் முன்னரைப் போன்ற மனிதராக இருக்கமாட்டார். மனக்குழப்பம், சந்தேகம், மனச்சோர்வு, பீதி, மனப்பதற்றம் போன்றவை மேலோங்கக்கூடும். மிக அற்பமான விடயங்களுக்கும் நிலை ததும்புவராக மாறுவார். இதனால் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தொழிலகத் தோழர்கள் இடையேயான உறவுகள் விரிசலடையலாம். இத்தகைய அறிகுறிகளில் ஒரு சிலவாவது உங்கள் உறவினருக்கு இருந்தால் அது அல்ஸிமர் நோயின் ஆரம்பமாக இருக்கலாம்.நீங்களாக முடிவெடுக்காது நல்ல மருத்துவரை அணுகுங்கள்.இது முற்று முழுதாகக் குணப்படுத்த முடியாத நோய் என்றபோதும், அது மேலும் தீவிரமாகி வாழ்வை நாசமாக்காதுதடுக்க முடியும்.இந்த நோயை முதல் முதலாக இனங்கண்டவர் ஒரு ஜேர்மன் மருத்துவர். Dr. Alois Alzheimer என்பது அவர் பெயர். அவரது நோயாளி Frau Augste என்பவராவார்.












02 பக்கத் தொடர்ச்சி

## இளைய தலைமுறையினர் கைகளில் நம் கலைகள்.......



செல்வி.கார்த்தன தனபாலசிங்கம்



செல்வி சுபாசினி பாலமுரளி

பரதநாட்டிய அரங்கேற்றங்கள் மூலம் பரதம் மட்டுமல்ல, பரதத்தைச் சுற்றி மிருதங்கம், வாய்ப்பாட்டு, நட்டுவாங்கம் தாய்மொழி என பல வளர ஆரம்பித்தன.
யேர்மனியில் தமிழ் வளர்ச்சி எனும்போது பல தமிழ்பாடசாலைகள் கல்விப்பணி புரிகின்றனர். இந்த இடத்தில் 200க்கு மேற்பட்ட தமிழாலயங்களை உருவாக உழைத்த உத்தமர் தமிழாலயத் தந்தை அமரர் இரா.நாகலிங்கம் ஐயா அவர்களை நினைவுகூருவது கடமையாகும்.

விழாக்களில் பரதம், வாய்ப்பாட்டு, நாடகம், வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், சொற்பொழிவுகள், என பல அணி செய்தன. விழாக்கள் அன்று குறிப்பிட நேரத்திற்கு ஆரம்பமாகாது. காரணம் தூர இடங்களில் இருந்து பார்வையாளர்கள் வருதல், அன்று போக்குவரத்திற்கு சொந்த வாகன வசதி குறைவு, இப்படி இருந்தாலும் நிகழ்ச்சி முடியும்வரை காத்திருந்து செல்லும் பண்பு அன்று இருந்தது. கையடக்கத் தொலைபேசியோ பேஸ்புக்கோ, வட்சப்போ, இல்லத காலம். விழாக்கள் தமிழ் மக்கள் ஒன்றுகூடும் இடமாகவும் அமைந்தது.

(அன்று மாவீரர் தினம் என்றால் ஆறாயிரம் மக்கள் ஒன்றுகூடி ஒருவருக்கு ஒருவர் அன்பு செய்த காலம்.)

அன்று பல கலைகளையும் யேர்மனியில் விதைவர்களது அறுவடை இன்று சிறப்பாக உள்ளது. அவர்களது பணி பயனற்றுப் போகவில்லை என்பதனை இன்று இளைய தலைமுறைகளின் கலை முன்னெடுப்புக்கள் மூலம் அறிய முடிகிறது.

எது சரியோ அதனைச் செய்வ்து. முகத்திற்காகவோ, தெரிந்தவர்கள் என்பதற்காவோ, நசிந்துபோய் கலைகளை நலியவிடாது காப்பது இளயை தலைமுறையின் சிறந்த பண்பாக காணமுடிகிறது. சொன்ன நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் விழாக்கள் தொடங்குவது. விழா ஒருங்கமைப் பாளர்களாக இளைய தலைமுறையே பொறுப்பேற்று நடத்துவது. இதனைப் பாரக்கும்போது உண்மையில் பெருமைகொள்ளவே வைக்கிறது.

விழாக்களில் பேச்சு என்று வரும்போது விழா என்ன? அதன் கருப்பொருள் என் என்பதனை வெளிப்படுத்தும் விதமாக, சுருக்கமாக, சொல்லும் பாங்குசிறப்பாக இருக்கின்றது. புலம்பெயர் நாடுகளில் யேர்மனிக்கு ஒரு சிறப்புண்டு. பரதமாகட்டும், மிருதங்கம்,ஓவியம்,சங்கீதம் ஆகட்டும், தாம் பெற்ற கலையை தமிழ்மொழியில் விளக்கும் அளவிற்கு, கற்பிக்கும் அளவிற்கு தாய்மொழியில் தகமைபடைத்தவர்களாக உள்ளனர்.
யேர்மன் மொழியில் பாடங்களைக் கற்று இன்று உயர்பதவியில் இருந்தாலும், தாம் கற்றதை அவர்களால் தமிழில் பகிரமுடியும் என்றால், இவர்களைப் பெற்றதற்கு நாம் இங்கு என்னதவம் செய்தோமோ என்று எண்ணவைக் கின்றது.
ஆரம்பகாலத்தில் அல்ல, இடைப்பட்ட காலத்தில் அரகேற்றம் என்றால் தென்னிந்திய கலைஞர்கள் வருகை தருவார்கள். இன்று வீணை, வயலின், மிருதங்கம், வாய்ப்பாட்டு நட்டுவாங்கம் என ஒரே மேடையில் நம் இளைய தலைமுறையினரே அமர்ந்திருந்து அவையை மகிழ்விப்பதைக் காணலாம். தமக்கு இக்கலைகளை கற்பித்த, மாத, பிதா, குரு, இவர்களை தெய்வமாகப் போற்றும் பண்பையும் காணலாம்.

அன்று தாயகத்தில் கூட நம்கலைஞர்கள் சிறப்பாக இருந்தால், அவர்களை ஈழத்து சௌந்தராஜன், ஈழத்து ஜேசுதாஸ், ஈழத்த சிவாஜி, என்று எல்லாம் சொன்ன காலம் இப்போ நம் இளைய தலைமுறையிடம் இல்லை. அவர்கள் அவர்களாகவே இருப்பதை பெருமையாகக் கொள்ளும் காலத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

பரதக்கலையில் இளைய தலைமுறையின் நம்பிக்கை நாயகனாக செல்வன் நிமலன் சத்தியகுமார் அவர்கள் திகழ்கின்றார்கள். மிருதங்க கலையில் பெண்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதற்கு உதாரணமாக செல்வி.கார்த்தன தனபாலசிங்கமும், இளைஞர்களில் திரு.பிரசாந். பிரணவநாதன், திரு.அனுஷாந் விஜயன். நகுஷாந் விஜயன், செல்வன் சங்கர்ஷன் ஜெயந்திநாதக்குருக்கள் என ஒரு பட்டாளமே பக்கவாத்தி யத்திற்கு அணிவகுக்கின்றது. வாய்ப்பாட்டில் செல்வி சுபாசினி பாலமுரளி. இவர் பிரபல தவில் மேதை சி.குமரகுரு அவர்களின் பேத்தியும், பிரப நாதஸ்வரக்கலைஞர் பாலமுரளி அவர்களின் மகளும் ஆவர். கலைகளில் மட்டுமல்ல, கல்வியிலும் உயர்ந்துவிளங்குவது இளம் கலைஞர்களுக்கு உரிய ஒரு பெரும் சிறப்பு ஆகும்.

கலைவிழாக்கள் சிறப்பாக ஒரு புறம் நடைபெறும் வேளை, கொண்டாட்டம் என்று ஒரே நோக்கோடு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையே முற்று முழுதாகக்கொண்ட இளையவர் அணிசெய்யும் நிகழ்சிச்சிகளும் யேர்மனியில் வலம் வரத்தொடங்கியுள்ளன. இதற்கு அன்று நடைபெற்ற விழாக்களில் நீண்ட சொற்பொழிவுகள் (2மணி நேரத்தையும் தாண்டி இளம் சந்ததியை சலிப்படையவைத்ததும்) ஒரு காரணமாக அமையலாம்.

இன்று வீட்டுக்குள் கணனியுடனும், தொலைக்காட்சியுடனும், நிஜமனிதரின் நிழல்கூட படாமல் இருக்கும் சில இளைஞர்களுக்கு, இப்பேறபட்ட கொண்டாட்டம் நிஜங்களைத் தரிசிக்க ஒரு சந்தர்ப்பம் வழங்குகிறது என்று கொள்ளவும் முடிகிறது.

எது எப்படி இருந்தாலும் இன்றைய இளம் தலைமுறைக் கலைஞர்கள் திட்டமிட்ட முறையில் கலப்படம் அற்ற வகையில், தாம் முறைப்படி கற்ற கலையை யேர்மனியில் எடுத்துச்செல்வது நமது மொழிக்கும் கலைக்கும், வளமூட்டும் ஒரு செயல் என்று நிச்சயமாக நம்பலாம். கலைகள் வளரவேண்டும் அது தமிழோடு சேர்ந்து மலரவேண்டும். அந்த மலர் வாசம் யேர்மனியில் பல கலையரங்குளில் மணம்பரப்புவது கண்டு மகிழ்கின்றேன்.
பி.குறிப்பு: மேலும் இக்கட்டுரை ஒரு முழுமையான தரவுகள் கொண்ட பதிவாக எழுதப்பட எதிர்காலத்தில் நீங்கள் அறிந்த தரவுகளை தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### மீண்டும்! மீண்டும்!! ஒரு வேண்டுகோள்

வெற்றிமணி பத்திரிகையில் எக்காரணம் கொண்டும் கைத்தொலைபேசியில் எடுத்த படங்களும் தெளிவற்ற புகைப்படங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. (பழைய நிகழ்வைக் கூறும் பழைய படங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.) சிறந்த புகைப்படக் கலைஞர்களின் திறமையை உங்கள் நிகழ்வுகளில் பயன்படுத்துங்கள்.
வெற்றிமணி உங்கள் பத்திரிகை அதன் பதிப்புத்திறனை பேணுவதில் உங்கள் பங்கும் உண்டு.



## கனடிய கவர்னர் ஜெனரலின் பாராட்டையும், தமிழர் தகவல் விருதையும் பெற்ற

# கனடிய பொலிஸ் உத்தியோகத்தர் நிரான் ஜெயநேசன்



**நிரான் ஜெயநேசன் கனடாவில் குடியேறி அரும்பணி ஆற்றியதையிட்டு மகிழ்ச்சியடைவதாக இலங்கையில் வசிக்கும் பெற்றோருக்கு கனடியப் பிரதமர் வாழ்த்து!**



காவற்துறையினர் என்றதும் பொதுவாக அவர்கள் கண்டிப்பானவர்கள், கரடுமுரடானவர்கள், கைது செய்பவர்கள் என்பதுதான் பலருக்கும் நினைவில் வரும். ஆனால், கல்லுக்குள் ஈரம் என்பதுபோல மனிதாபிமானம், மனிதநேயம், மனிதப்பண்பு நிறைந்தவர்களும் இச்சேவையிலுள்ளனர் என்பதற்கு நல்லதோர் உதாரணமாக இன்று திகழ்பவர் ரொறன்ரோ பொலிஸ் சேவையைச் சேர்ந்த கான்ஸ்டபிள் நிரான் ஜெயநேசன்.

இதனை நிரூபிக்கும் ஒரு சம்பவம் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி ரொறன்ரோவில் இடம்பெற்றது. இங்குள்ள அங்காடியொன்றில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட பதினெட்டு வயது இளைஞன் மீது சட்ட நடவடிக்கை எடுக்காது, அவனது தேவையை அறிந்து அதற்கேற்ற வகையில் செயற்பட்டு அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் வாழ்வளித்த மனிதாபிமானப் பணிக்காக நிரான் ஜெயநேசன் கனடிய ஊடகங்களால் மட்டுமன்றி, சர்வதேசப் பரப்பினதும், கனடிய ஆளுனர் நாயகத்தினதும் (கவர்னர் ஜெனரல்) பாராட்டைப் பெற்று உயர்ந்த பண்பாளராக இன்று போற்றப்படுகிறார்.

சம்பந்தப்பட்ட அங்காடியில் இளைஞர் ஒருவர் சில ஆடைகளைத் திருட முற்பட்டதால் காவற்துறை உத்தியோகத்தர்கள் அங்கு அழைக்கப்பட்டனர். விசாரணைக்கென அங்கு சென்ற இரண்டு உத்தியோகத்தர்களில் நிரான் ஜெயநேசனும் ஒருவர்.

அந்த இளைஞனிடம் இவர் விசாரணை நடத்தியபோது, ஏழ்மையிலிருந்த தனது குடும்பத்தின் நிலையை விபரித்த அந்த இளைஞன், மறுநாள் வேலை ஒன்றுக்கு நேர்முகத் தேர்வுக்குச் செல்வதற்கு ஆடைகள் இல்லாததால் அவற்றைத் திருட முயற்சித்ததாக உண்மையைக் கூறினார்.

காருண்ய ரீதியாக அந்த இளைஞன்மீது இரக்கப்பட்ட நிரான் ஜெயநேசன் தமது அதிகாரிகளின் அனுமதியைப் பெற்ற பின்னர், தமது சொந்தப் பணத்தில் ஆடைகளை வாங்கிக் கொடுத்து அவரை வாழ்த்தி அனுப்பினார்.

இச்சம்பவம் நடந்த நான்கு நாட்களின் பின்னர் நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற நிறுவனத்தில் தமக்கு வேலை கிடைத்ததாக அந்த இளைஞன் இவருக்கு அறியக் கொடுத்தார்.

தாம் வாங்கிக் கொடுத்த ஆடைகளையே அந்த இளைஞன் அணிந்து சென்று வேலை பெற்றதாகத் தெரிவித்தபோது தாம் மிகவும் மகிழ்ந்ததாக நிரான் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இவரது மனிதாபிமானப் பணியை வியந்து இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் பலர் பாராட்டுகளைத் தெரிவித்தனர். கனடிய அமைச்சர்கள் பலர் நேரடியாகத் தொடர்பு கொண்டு பாராட்டினர். கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கொழும்பிலுள்ள கனடியத் தூதரகம் ஊடாக இலங்கையில் வசிக்கும் நிரானின் தந்தையாருக்கு ஒரு செய்தியை அனுப்பினார். நிரான் கனடாவில் குடியேறி அரும்பணியாற்றியதையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாக பிரதமரின் செய்தி அமைந்திருந்தது.

லண்டன் பி.பி.சி. ஒலிபரப்புச் சேவை நிரானுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவரது செவ்வியை சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச் சென்றது. இலங்கையில் கிளிநொச்சியில் ஆரம்பக் கல்வியை கற்று, பின்னர் கொழும்பு சென். தோமஸ் கல்லூரியிலும், மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரியிலும் கற்ற பின்னர், 1996ல் இந்தியா சென்ற நிரான் ஜெயநேசன், அங்கு உயர்கல்வியை முடித்த பின்னர் 2001ம் ஆண்டில் கனடாவில் குடியேறினார். ஸ்காபரோ லமறெக்ஸ் கல்லூரியில் கற்கையை முடித்தபின், ஹமில்டன் மொஹா கல்லூரியில் பொலிஸ் பயிற்சியை பெற்றதைத் தொடர்ந்து பத்தாண்டுகள் வரை தனியார் பாதுகாப்புத்துறையில் பணியாற்றினார்.

2014ம் ஆண்டு ரொறன்ரோ பொலிஸ் சேவையில் இணைந்த இவர் தமது நான்காண்டுச் சேவைக்குள் உலகளாவிய ரீதியில் உயர்வு பெற்றுள்ளார். நிரான் ஜெயநேசன் அவர்களுக்கு மனிதாபிமானப் பணிக்கான தமிழர் தகவலின் சிறப்பு விருது வழங்கப்பட்டது.



# முன்னால் உள்ள திருடனைப் பிடிக்கும் மூக்கு கண்ணாடி!



பொலிஸாருக்கு கண்காணிப்பு கமரா பொருத்தப்பட்ட மூக்குக்கண்ணாடிகள்!!!
உலகிலேயே சீனாவில்தான் அதிக கமராக்கள் இருக்கிறது. சீனாவில் திரும்பும் திசையெல்லாம் (CCTV) சி.சி.டி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டு இருக்கும். இதுவரை சுமார் 17 கோடி கமராக்கள் அங்குப் பொருத்தப்பட்டுள்ளது. சாலையில் நடக்கும் எந்த ஒரு நபரின் அடையாளத்தையும் இதன் மூலம் ஒரே நொடியில் கண்டுபிடித்துவிட முடியும் என்று கூறப்படுகிறது.

தற்போது அங்கு இருக்கும் கமராக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட உள்ளது. இன்னும் 3 ஆண்டுகளில் மேற்கொண்டு 40 கோடி கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படும் எனவும் கூறப்படுகிறது.

இதன்மூலம் சீனாவில் எந்த இடத்தில் யார்? இருக்கிறார்கள் என ஒரு நொடியில் கண்டுபிடிக்க முடியும்.

இந் நிலையில் அங்குத் திருடர்களை கண்டுபிடிக்க புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது. அதற்காக மூக்குக்கண்ணாடி பயன்படுத்தப்பட உள்ளது. மூக்குக்கண்ணாடி ஒன்றின் மூலம் திருடர்களை, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

இக் கண்ணாடிகள் பொலிஸாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதை வைத்து யாரையாவது பார்ப்பதன் மூலம் அவர்கள் குற்றவாளிகளா? இல்லையா? என கண்டுபிடிக்கலாம். இக் கண்ணாடியில் கமராவுடன் ஸ்கேன் செய்யும் அமைப்பும் இருக்கும். இது எதிரே வருபவர்களை ஸ்கேன் செய்தவுடன் பொலிஸாரிடம் இருக்கும் தகவலை வைத்து அந்த நபர் குற்றவாளியா? என்பதை கண்டறியும். தற்போது இந்த தொழில்நுட்பத்தை மக்கள் அதிகமாக கூடும் பொது இடங்களில் சோதனை செய்து வருகிறார்கள்.

இந்த தொழில்நுட்பம் மூலம் இதுவரை 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.தற்போது இந்த மூக்குக்கண்ணாடி மிகவும் நன்றாக இயங்கி வருகிறது எனவும், இது சீனாவில் புதிய பாதுகாப்பை உருவாக்கும் எனவும் இதை தயாரித்த நிறுவனத்தை சேர்ந்தவர்கள் கூறியுள்ளனர்.


S.J. ASIAN - AFRO STORE



உங்கள் இலத்திற்கு தேவையான அனைத்து மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்
பசுமையான மரக்கறிகள்
மற்றும் தரம்மிக்க
கடல் உணவுப் பொருட்கள்
அனைத்தும் நிதான விலையில் பெற்றுப் பயனடையுங்கள்.

Mannheim
S1 – 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

Ludwigshafen
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de



Indo Afro Travels
68161 Mannheim

உங்கள் பயணங்களை மகிழ்வூட்ட சிறந்த விமானச் சீட்டுக்களுக்கு எம்மை நாடுங்கள்.





வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள். கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!



APIRAAMI ENTERPRISE
அபிராமி என்ரப்பிறைஸ்
இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
துரித பண மாற்றுச் சேவை!
Ria
VALUTRANS MONEY TRANSFER
Pferdemarkt 9 45127 ESSEN Tel.: 0201/236925



மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம்
( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம்
(Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில்
A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen


TKS BEST FOODS
TKS Best Foods
வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது
சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துகள்!
Happy Tamil New Year 2018
07.04.
TAMIL
NEW YEAR
SALE
07.04.2018
சனிக்கிழமை அன்று மட்டும் கொள்வனவு
செய்து நீங்களும் அதிஷ்டசாலி ஆகுங்கள்!
07. 04. 2018
கொள்வனவு செய்யும்
அனைவருக்கும் பரிசில்கள்
காத்திருக்கின்றன!
(வரையறுக்கப்பட்டது)
0049 231 950 468 83 | 0049 231 950 468 82
info@tks-bestfoods.de | www.tks-bestfoods.de
tksbestfoods | Rheinische Str. 79, 44137 Dortmund



# சுவைக்கும் கனடா!

இளவாலை எஸ்.ஜெகதீசன்.

பசியோடும் ருசியோடும் உலக உணவை சுவைக்க விரும்புபவர்களுக்கு உகந்த நாடு கனடா.அங்கு இல்லாத உணவு வேறு எங்கும் இருக்காது என்பவர்களுக்கு விருந்தாவதும் கனடா.

உலகில் 195 நாடுகள் உள்ளன.அவற்றுள் கனடாவில் 'சாப்பாட்டுக்கடை' வைத்திருக்கும் அனைத்து நாடுகளும் தமக்கான உணவு விழாவை வருடத்தில் ஒரு நாளாவது பரிமாறுகின்றன. வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு அவரவர் உணவு வகைகள் பிடிக்கும்.அடுத்தவர்களுக்கு அவற்றில் சில சுவைக்கும். சில மிரட்டும். சில விரட்டும்.

சர்வதேச உணவு தினம் அக்டோபர் மாதம் 16 ம் திகதி ஆகும்.கனடா பூராவும் மாதம் தோறும் உணவு விழா என்ற பெயரில் வெவ்வேறு நகரங்களில் வெவ்வேறு நாட்டவர்கள் தத்தமது நாடுகளின் அடுப்படிப்புகையை நகர வீதிகளில் புகைய விடுகின்றார்கள்.இந்தியர்கள் தனி அழகுடன் உண்பது ஆகஸ்ட் மாத உணவு விழாவான இந்திய சுவையில்! மண்பானை விறகு போன்றனவும் ஒரு சிலரால் பயன்படுத்தப்பட்டு பாரம்பரியத்தை சூடாக்கும்.கிரேக்கர்களின் உணவு விழா ஆகஸ்ட் மாதத்தில் பல உணவு வகைகளுடன் மொழி புரியாத சுவை தெரியாத மக்களையும் மயக்கும்.மத்திய கிழக்கு நாட்டவர்களின் உணவு விழா மார்ச் மாதம் நடைபெறும்.அதில் கலந்து கொள்பவர்களின் பெரு விருப்பம் அங்கு கிடைக்கும் டூண்டா கபாப்.மரக்கறி கபாப் கேட்டால் (கருவாடு கலந்து) கிடைக்கும். ஜேர்மனியரின் உணவு விழா பவேரியன் கலாசாரத்தை பிரதி பலிக்கும் வகையில் அக்டோபர் மாதம் சுவையூட்டும். உருளைக்கிழங்கை அவித்து பொரித்து வறுத்து வெதுப்பி இறைச்சி அல்லது மீனுடன் வழங்குவார்கள்.300 பாண் வகைகள் திரும்பிய பக்கமெல்லாம் தெரிந்து ஜேர்மனியின் வெதுப்பகங்களை பிரமிப்புடன் நினைவூட்டும்.

ஈழத்தமிழர்களுக்கு வீதிவிழா கொத்துவிழா என இரு நிகழ்ச்சிகள் வருடாவருடம் வீதியில் கடை விரிக்கின்றன. உறவோடு உண்ட திருப்தியையும்இஊரோடு உண்ட பிரமையையும் ஊட்டுகின்றன.கனடாவில் நோண்டி நொங்கெடுப்பவர்களையும் அங்கு காணலாம்.இளநீர் கரும்பு ஊர் மாம்பழம் போன்றனவும் கிடைக்கும். ஊர் கோழி ஊர் ஆடு ஊர் மான் பிரியர்கள் ஊர் சாராய வேட்கையுடன் அங்கு ஊர்ந்து திரிவதையும் வாழையிலை விரும்பிகள் அங்கு சம்மணமிட்டு ஒரு பிடி பிடிப்பதையும் விநோதமாக சிறுவர்கள் பார்ப்பார்கள். கொத்துவிழாவில் கொத்து ரொட்டி மட்டுமே ஏகப்பட்ட வகைகளில் சுடச்சுடக் கிடைக்கும்.

கனடாவின் அல்பேட்டா மாகாணத்தின் தலைநகரமான கல்கரியில் உலகிலே மிகப் பெரிய திறந்த வெளியரங்கில் வருடந்தோறும் ஜூலை மாதத்தில் 10 நாட்கள் ஸ்டாம்பிட் கொண்டாட்டம் நடைபெறும். அப்பொழுது அதனை அண்மித்த பகுதிகளில் உள்ளூர் வெளியூர் வெளி நாட்டுப் பயணிகளுக்கு தெருவோர பந்தல்களில் இலவச காலை உணவு வழங்கப்படும். 2017 ம் ஆண்டு நான்கு லட்சம் பான் கேக்குகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

ரொரன்ரோவை அண்மித்து 168 உணவகங்கள் தமிழர்களால் தமிழருக்காக நடத்தப்படுகின்றன.இந்த கணிப்பீடு சரிதானா என்பதும் சரியாததுதானா என்பதும் தெளிவில்லை.கொஞ்சம் கூடியிருந்தால் புதிதாக கடைகள்

## 168 தமிழர் சாப்பாட்டுக்கடை!

குறைந்திருந்தால் இருந்த கடைகளை இழந்திருக்கலாம்.அமர்ந்து உண்ணும் வசதியுடன் கூடிய உணவகங்கள் விரல் விட்டு எண்ணிவிடக் கூடியவை. அவற்றிலும் சில அளவற்ற சாப்பாட்டை வழங்கும்.வீட்டுக்கு விநியோகிக்கும் சில கடைகளும் உண்டு.நனிசைவ உணவு தனிசைவ உணவு மாமிச உணவு மச்ச உணவு ஹலால் உணவு என தனித்தனி கடைகளும் உண்டு.

அனேகமானவை பகல் பதினொரு மணி முதல் இரவு பதினொரு மணி வரை திறந்திருக்கும். சில கடைகள் அதிகாலை ஆறு மணி முதல் நள்ளிரவு பன்னிரண்டு வரை திறந்திருக்கும். சீனர் கறுப்பர் வெள்ளையர் என மாற்று இனத்தவர் வாசலில் நின்று வேடிக்கை பார்ப்பதில்லை.உள்ளே புகுந்து உள்ளே தள்ளுவார்கள். பரிசாரகர்களுக்கு 1520மூ பணிக்கொடையாக உபகாரமாக்குவது சம்பிரதாயம்.

ஒரே கடைத் தொகுதிக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட உணவுக் கடைகளை அமைப்பது தமிழரின் சாமர்த்தியம். ஆனால் அத்தனை கடைகளிலும் அமோக விற்பனையை நிகழ்த்தி வியக்க வைப்பது தமிழரிடம் சாத்தியம்.

கனடாவில் சுகாதார பிரிவினரின் நடவடிக்கை ஆரோக்கியமானது. உணவக வாசலில் பச்சை நிற சான்றிதழ் காணப்படின் அந்த உணவகம் சுத்தம் பேணுவதாக அர்த்தம்.மஞ்சள் எனின் சில சீர்கேடுகளை நிவர்த்தி செய்ய எச்சரிக்கப்பட்டுள்ளதை குறிக்கும்.சிவப்பு எனின் மறு பரிசீலனை வரை செயலிழந்திருப்பதை குறிக்கும்.



கொத்து ரொட்டியை தானே கொத்தி தானே சுவைக்கும் கனடிய பிரதமர்

தமிழர் வேகமாக கனடா சென்றபின் வேகமாக இலங்கை சென்ற பிரபல உணவு வேகப்பம் (பீட்ஸா).சிறுவர் இளையோர் முதியோர் என சகல தரப்பினராலும் விரும்பப்படும் உணவு. மாணவர்கள் பலருக்கு படிப்பது பிடிக்காவிடினும் பீட்ஸாவை 'ஒரு வெட்டு வெட்டுவது' நன்கு பிடிக்கும்.வேகப்பத்தின் பூர்வீகம் இத்தாலி. அது மட்டுமல்ல மாச்சேவை (பாஸ்ரா) மாச்சுருள் (மக்ரோனி) மாவடை (லசான்யா) நூலப்பம் (ஸ்பெகற்றி) நூலடை(நூடுல்ஸ்) போன்ற இத்தாலிய உணவுகள் கூட தமிழுக்கு சுவை சேர்த்து தமிழருக்கு ருசியூட்டுகின்றன.

தொடர்ச்சி 17ம் பக்கம்






சேவியர்

# காதல் என்பது எதுவரை

காதலின் தொடக்கப் புள்ளி எதுவெனக் கேட்டால் ஒருவேளை சட்டென சொல்லி விடலாம். அது ஒரு மழைச்சாரலின் இடையே தெரிந்த காதலியின் மின்னல் முகமாகக் கவித்துவம் காட்டலாம். கூடவே நடந்த தோழி சட்டென பேசிய ஒற்றை வார்த்தையில் உள்ளுக்குள் இடைந்து தெறித்த கண்ணாடிக் கூடென கதைகள் பேசலாம். முகத்தைப் பார்த்திராத டிஜிடல் காதலியின் குறுஞ் செய்தி குறுகுறுக்க முளைத்து வந்ததென தொழில் நுட்பம் பேசலாம். எது எப்படியோ, காதலின் தொடக்கப் புள்ளியைக் கண்டுபிடிப்பதொன்றும் பிரம்மப் பிரயர்த்தனம் இல்லை !

ஆனால் அதன் முடிவுப் புள்ளியை எப்படிக் கண்டுபிடிப்பது. வட்டத்தை வரைந்து விட்டு அதன் மூலைகளைக் கண்டுபிடிக்கச் சொல்வது போல சிக்கலானது அது. கைப்பிடி அளவுக் காற்றை எடுத்து கடித்துத் தின்பது போல இயலாத காரியம் அது.

பெய்து ஓய்ந்த பெருமழையின் கடைசித் துளி எங்கே விழுந்ததென எப்படிக் கண்டுபிடிப்பது ? பிரபஞ்சத்தின் முதல் ஆழியின் கடைசி அலை எப்போது அடிக்குமென எப்படிக் கணக்கிடுவது ? கடைசியாய் எப்போது என் நாசிக்குள் பிராணவாயு படுத்துப் புரளுமென எப்படி உறுதி செய்வது ? நீள்வட்டப் பாதையில் ஓடிக்கொண்டிருக்கும் விளையாட்டு ரயிலின் கடைசிப் புள்ளி எதுவென எப்படித் தெரியும் ? காதலின் கடைசியும் அப்படியே ! அது எதுவரை என்பதைக் கணக்கிடுவது கடினம்.

காதலின் கடைசியை நமது வாழ்க்கையின் கடைசிக் கணம் வரை, என முடிவு செய்யலாமா ? அல்லது நம் வாழ்க்கையின் கடைசிக் கணத்தை காதலின் கடைசிக் கணம் வரை, என முடிவு செய்யலாமா ?

காற்று உள்ளவரைக்குமா, அந்த தொடுவானத்தின் எல்லை தரையில் தொடும் வரைக்குமா, பூமியின் ஓட்டம் நிற்கும் வரைக்குமா ? அல்லது அந்த வானத்தின் நீலம் உள்ளவரைக்குமா ? இவையெல்லாம் கவிதைகளில் உவமைகளாய் ஒளிந்திருக்கத் தான் லாயக்கு !

எனில், காதல் என்பது எதுவரை ?

அன்பெனும் அகல் விளக்கு இதயத்துக்குள் இடைவிடாமல் எரிந்து கொண்டிருக்கும் வரை !, அதில் பாசத்தின் எண்ணையும், தியாகத்தின் திரியும் எரிந்து கொண்டிருக்கும் வரை ! அன்பினை அகற்றிவிட்டுப் பார்த்தால் காதலின் திரைச்சீலைகள் கிழிந்து தொங்கும் ! அழகை இழக்கும்.

ஒருவர் குறையை ஒருவர் தாங்கும் வரை ! ஒருவர் நிறையை ஒருவர் ஏந்தும் வரை ! இட்டு நிரப்புதலும், விட்டுக் கொடுத்தலும் காதல் வாழ்க்கையின் ஆனந்த தருணங்கள். முழுமை என்பது எங்கும் இல்லை என்பதை மனதால் புரிந்து கொள்ளும் வரை காதல் வாழும். குறைகள் என்பது அழகியலின் அம்சம் என்பது நிலைக்கும் வரை காதல் நீடிக்கும்.

காமத்தின் மெல்லிய சாரல் காதலுக்குள் பெய்யும் வரை ! காதலின் அடைமழை காமத்துக்குள் கலந்திருக்கும் வரை காதல் வாழும். மோகத்தின் வரிகள் மட்டுமே கவிதை முழுதும் உடல் வாசனை வீசிக் கிடந்தால் காதல் வீழும். மோகத்தின் மெல்லிய காற்று, காதலின் தோட்டத்தில் வீசலாம் ஆனால் மோகத்தின் புயல் மட்டுமே காதலின் தோட்டத்தில் அடித்துக் கொண்டிருக்கக் கூடாது.

சுயநலத்தின் சுருக்குப் பைகளில் அடுத்தவர் ரசனையை முடிந்து விடாமலிருக்கும் வரை ! காதலுக்கு சுயநலம் இல்லை, சுயநலம் இருந்தால் அது காதலில்லை. அடுத்தவர் சுதந்திரத்தின் சிறகுகளை நறுக்கி காதலுக்கான கை விசிறியைச் செய்ய முடியாது. அப்படிச் செய்தால் காதல் நிலைப்பதில்லை.

இருவரின் உறவில் பாதுகாப்பின் பரிசுத்தம் பரவிக் கிடந்தால் காதல் வாழும். பயத்தின் ஆக்டோபஸ் கரங்கள் ஆங்காங்கே விரவிக் கிடந்தால் காதல் வீழும். பயம், காதலின் எதிரி. வெளிப்படையாய் இருக்கின்ற காதலில், ரகசிய பயங்கள் எழுவதில்லை. ரகசிய பயங்கள் முளைக்கும் இடங்களில் காதல் வெளிப்படையாய் இருப்பதில்லை.

காதல் வெறும் உணர்வுகளின் பிள்ளையல்ல. அது செயல்களின் தாய். உணர்வுகள் நெருக்கமாக்கும், செயல்கள் அந்த நெருக்கத்தை இறுக்கமாக்கும். காதலைக் காதலுடன் வைத்திருக்க காதலால் மட்டுமே முடியும் ! அந்தக் காதலை வார்த்தைகளும், வாழ்க்கையும் பிரதிபலித்தால் காதல் வாழும்.

இப்படி இருந்தால் தான் காதல் வளரும் என படிப்படியாய் சில வரையறைகளை வைத்தால் காதல் மூச்சுத் திணறும். அடுத்தவர் இயல்புக்காய் வருவதல்ல காதல், நமது இயல்பினால் வருவதே உண்மைக் காதல். பறிப்பவரின் இயல்புக்கேற்ப தாவரங்கள் பூப்பதில்லை ! தனது இயல்புக்கேற்பவே பூக்கின்றன. காதலை உள்ளத்திலிருந்து வெளியெடுப்போம், எதிரே இருப்பவரின் எண்ணத்திலிருந்தல்ல.

என்னை விட நீ பெரியவள் எனும் எண்ணம் எழுகையில் காதலுக்கு சிறகு முளைக்கும். எதையும் விட பெரியவள் நீ எனும் சிந்தனை வளர்கையில் சிறகுக்கு வானம் கிடைக்கும். அந்த எண்ணம் இருவருக்கும் எழுகையில் காதலுக்கு ஆயுள் கிடைக்கும் ! அத்தகைய காதல் அழிவதில்லை.

வேற்றுமைகளை அறிந்து கொள்வதிலும் அதை அணிந்து கொள்வதிலும் காதல் வளரும். எல்லா இசைக்கருவிகளும் புல்லாங்குழல் ஆவதில்லை. எல்லா பறவைகளும் குயில்கள் ஆவதில்லை.

வேற்றுமைகளே அழகு. காதலிலும் வேற்றுமைகளை விரும்பினால் காதலின் ஆயுள் கிணறு நிரம்பும்.

தொடர்ச்சி 17 ம் பக்கம்







தொடர்ச்சி 15 ம் பக்கம்



# காதல் என்பது எதுவரை






மன்னிப்பின் மகத்துவம் காதலின் தனித்துவம். அடுத்தவர் செய்யும் பிழைகளை மன்னிக்கும் மனம் காதலின் ஆழத்தின் அடையாளம். மன்னிக்க மறுக்கும் இடத்தில் காதலின் கிளைகள் பூ விடுவதில்லை. காதலின் நிலைகள் வேர் விடுவதில்லை. மன்னிப்பு கேட்கும் முன் மன்னிக்கும் மனமிருந்தால் காதல் தேயாமல் வளரும்.

காதல், வெறும் வார்த்தைகளினால் ஜாலம் கட்டி, செயல்களினால் ஓரங் கட்டுவதில்லை. சத்தத்தில் மௌனத்தையும், மௌனத்தில் சத்தத்தையும் பிரித்தெடுக்கும் வித்தை காதலுக்கு உண்டு. சொல்லாத வார்த்தைகளைப் புரிந்து கொண்டு செயல்களினால் அதை சரிசெய்யும். அத்தகைய காதல் நீண்ட நெடிய காலம் வாழும்.

நான் எனும் சிந்தனை மறைந்து நாமென்பது உள்ளெங்கும் நிறைந்து நிற்பதில் காதல் வலிமையடையும். தன் கனியை தானுண்பதில்லை கொடிகள். தனக்கென எதையும் சேர்த்துக் கொள்வதில்லை உண்மைக் காதலர்கள். காதலின் வளர்ச்சி நாமென்னும் சிந்தனையின் தொடர்ச்சி.

காதலுக்காய் செலவிடும் நேரங்கள், வாழ்க்கையை அழகாக்கும் காலங்கள். நிறைய நேரம் செலவிடும் காதல் நீண்டகாலம் வாழும். பகிரப்படும் நேரங்களே, காதலின் பரவசத்தின் பதுங்கு குழிகள். அவையே காதலை சாகாவரம் தந்து வாழவைப்பவை.

நம்பிக்கை நங்கூரம் வாழ்க்கைக் கடலில் காதல் கப்பலை நிறுத்தும் வரை காதல் வாழும். நம்பிக்கையின் நங்கூரம் கழன்றி விழுகையில் காதல் கப்பல் நிலைகுலையும். எதிர்பாராத திசைகளில் பயணம் நீளும். நம்பிக்கை நங்கூரத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

மலருடன் அமர்ந்திருக்கும் வண்ணத்துப்பூச்சி போரடிக்கிறது என பறந்து போவதில்லை. துணையுடன் இருக்கும் போது போரடிக்காத காதல் நீண்டகால வாழ்க்கைக்கு உத்தரவாதம். சலிப்பை ஏற்படுத்தும் காதலுக்குள் இருப்பது உண்மை நேசத்தின் கருவல்ல. சில்மிஷசிலிர்ப்பின் கரு.

சொல்லாத காதல் என்பது கொல்லப்பட்ட காதல் ! மின்மினி கூட தன் இருப்பை புள்ளி வெளிச்சத்தால் பூமிக்கு பறைசாற்றிக் கொண்டே தான் இருக்கிறது. காதல் மட்டும் ஏன் காரிருளுக்குள் கவிழ்ந்து கிடக்கிறது ? காதலில் பகிரப்படும் வார்த்தைகள் அதன் ஆயுள் ரேகையை நீளமாக்கும், காதல் பாதையை ஆழமாக்கும் !

ஆறுதல் கரங்கள் தயாராய் இருந்தால் காதல் அழிவதில்லை. பழிபோடும் நிலைவரினும் பழியேற்கும் மனநிலை கொண்டால் காதல் அழிவதில்லை. காதல் என்பது நதியின் ஸ்பரிசம், யார் தொட்டாலும் மனதில் சிலிர்க்கும்.

ஒரு சிலை செய்யும் நுணுக்கத்தில் காதல் நம்மைச் செதுக்கும். காதலின் உளிப்பிரயோகங்களுக்கு காதலர்கள் புன்னகையோடு ஒத்துழைத்தால் போதும். காதலின் உளிப்பிரயோகங்களே ஆயுளின் சிலையை அழகாக்கும்.

அடுத்தவரின் புன்னகையில் மகிழும் உணர்வே காதலின் வளர் நிலை. அடுத்தவர் புன்னகைக்க வேண்டும் என வாழ்வதே காதலின் உயர்நிலை. அந்த எண்ணத்தை இருவரின் இதயமும் ஏற்கும் போது காதலின் ஆயுள் கெட்டியாகும்.

எனில் காதல் என்பது எதுவரை ?
காதலர் விரும்பும் வரை !
காதலர் விரும்புவது எதுவரை
காதலை விரும்பும் வரை !

16 ம் பக்க தொடர்ச்சி....

# சுவைக்கும் கனடா!





கனடாவில் தமிழரின் எந்தச்சுவையகங்களிலாவது இப்படிக் கேட்டால் 'மொழி' விளங்காது உரிமையாளர்களே திணறக்கூடும்.

வேகமாக தமிழர் கனடா சென்றபின் வேகமாக கனடா சென்று பிரபலமானது:மதிவெடி!பலர் வாயில் வைத்தனர்:சிலர் வாயால் வைதனர்.இதன் காரமான தாக்கத்தில் மோட்சமடைபவர்களும் உண்டு.மிதிவெடியின் ஏப்பம் கூட அயலில் உள்ளவர்களை சிதறடிக்கும் என்பார்கள்.மெதுவாக கனடா சென்றவர்களால் மெல்லமெல்லமாக கனடா சென்று படுவேகமாக பிரபலமடைவது கோடை காலங்களில் கிராமங்களின் ஒன்று கூடல் நிகழ்வுகளுக்கு சுவையூட்டும் கோழிப்புக்கை!

எந்த நாட்டின் எந்த உணவு அந்தந்த மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றது என்பதை எவ்விதம் அறியலாம் என்ற கேள்வி மூளையை குடைவது அல்லது வயிற்றை பிசைவது சகஜம்.உணவின் பெயருடன் ஆகக் குறைந்தது ஒரு கடையாவது அந்தப்பிரதேசத்தில் அமைந்திருந்தால் அந்த உணவு நல்ல உணவு என ஊகிப்பவர்களும் உள்ளனர்.

தற்பொழுது இளைஞர்களாக இருக்கும் புதிய தலைமுறை சகல நாடுகளின் உணவுகளையும் ருசி பார்ப்பதற்கு போன ஜென்மத்தில் ஏதாவது புண்ணியம் செய்திருக்க வேண்டும்.கூகிளில் பார்த்து தமக்கான விருப்புகளை தெரிவு செய்து கொள்கின்றனர்.ஊர்வன நடப்பன நீந்துவன பறப்பன என ஒன்றையும் விட்டு வைப்பதில்லை.வயிறு வளர்க்கும் சமாசாரங்கள் பலதை இயங்கலை மூலம் இருக்கும் இடத்துக்கே வரவழைத்து மெல்வது அவர்களுக்கு பிடித்தமானது.


இட்டலியின்தாயகம் இந்தோனேஷியா என்பது வரலாற்றின்சுவை. ஆனால் கேட்லி என்ற அவர்களது உணவை பெயர் மாற்றி இட்டலி எமதென்று நாம் ...அவிக்கிறோம்!

மாமிச உணவிலிருந்து சீனர் பலர் மரக்கறி உணவாளர்களாகின்றனர் என்பது 'தொட்டுக்கொள்ள' ஒரு புதுத்தகவல். கனடாவில் வெள்ளையரின் நிர்வாகத்தில் உள்ள முன்னணி உணவகங்கள் பலவற்றில் பிரதம சமையற் கார்களாக மேலைத் தேச சமையலுக்கு தமிழர்கள் பலர் சுவை ஊட்டுகின்றனர். சர்வதேச போட்டிகளில் பலவற்றில் கலந்து நாட்டின் பெருமைக்கும் புகழுக்கும் விருதுகளால் ஊட்டமளிக்கின்றனர்.தமிழரின் பாரம்பரிய உணவுகளை வெள்ளையர் கறுப்பர் சீனர் விரும்பி உண்டு கண்ணீர் வடிப்பதும் தமிழரின் நாவில் நுழைய மறுக்கும் அவர்களின் உணவு வகைகளுக்கு தமிழரின் நாக்கு நீள்வதும் கனடாவில் சர்வசாதாரணம்! நன்றி: தமிழர் தகவல்-கனடா




Warendorf மாவட்டத்தில்
மாபெரும் அங்காடி
M point Supermarkt
POINT Supermarkt
e.mail: mpointsupermarkt@yahoo.de
சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
01.04.18 - 28.04.18
துரித பணமாற்றுச் சேவை!
எம்மை நாடுங்கள்!!
VALUTRANS MONEY TRANSFER
உடனுக்கு உடன் இறக்குமதி செய்யப்பட்ட
மரக்கறிவகைகள் கடல் உணவு வகைகள்,
மற்றும் மளிகைப் பொருட்களுக்கும்
எம்மை நாடுங்கள்
Email : shansure7480@yahoo.de
Cheesebits
Tilda
PURE BASMATI
TRS
WHOLE JEERA
M-Point-Supermarkt
Von-Gallen Str - 5
48336 Sassenberg
(Kreis Warendorf )
Tel: 02583 30 30 300
0179 48 555 54
அத்துடன் வெகுவிரைவில்
Warendorf - Münsterland
நகரத்தில்
" Westfälischer Hof "
Restaurant + Saal
இனிய சுவையான உணவுடன் உங்களுடைய கொண்டாட்டங்களை சிறப்பிக்க
Restaurent உடன் கூடிய ஓர் அழகிய மண்டபம்

# செத்தா செத்ததுதான், சொர்க்கமும் இல்லை நரகமும் இல்லை!





## ஸ்டீபன் ஹாக்கிங்.

மறு பிறவி. சொர்க்கம், நரகம்..இவையெல்லாம் நிஜமா.. நாம் இறந்த பின்னர் என்ன ஆவோம்.. எங்கு போவோம்... நமது உயிர் என்னாகும்.. ஆவி, பேய் உண்டா.. இதற்கெல்லாம் விடை தெரியாமல் அத்தனை பேருமே அலை பாய்ந்தபடிதான் உள்ளோம்.

ஆனால் இது எதுவுமே கிடையாது. இறப்போடு எல்லாம் முடிந்து போய் விடும் என்று அடித்துக் கூறியவர் ஸ்டீபன் ஹாக்கிங். மறு பிறவி கிடையாதுங்க மரணம்தான் இறுதியானது.

லண்டன்: உலகத்தில் உள்ள அத்தனை சோம்பேறிகளும் படிக்க வேண்டிய பாடம் ஸ்டீபன் ஹாக்கிங். எதுவுமே செய்யாமல் முடங்கிப் போகும் மனிதர்களுக்கு மத்தியில் சாதிக்கத் துடிக்கும் ஒவ்வொருவருக்கும் மிகப் பெரிய உந்து சக்தியாக திகழ்ந்தவர் ஸ்டீபன் ஹாக்கிங். எதையுமே அறிவியல் பூர்வமாக மட்டுமே பார்க்கக் கூடியவர் ஹாக்கிங். நீ சீக்கிரம் செத்துப் போய் விடுவாய் என்று மருத்துவர்களால் கைவிடப்பட்டவர் ஹாக்கிங். அவருக்கு அப்போது 21 வயதுதான். மோட்டார் நியூரான் பாதிப்புக்குள்ளாக்கி சக்கர நாற்காலியில் முடங்கியது அவரது வாழ்க்கை. ஆனால் அவர் முடங்கவில்லை.

மரணத்துக்கே தண்ணி காட்டி வந்தவர். அசாத்தியமான புத்திசாலி. மரணம் பற்றி எனக்குக் கவலை இல்லை. அது நிச்சயம் ஒரு நாள் வரும். ஆனால்

அது வருமே என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கப் போவதில்லை. எனக்கு நிறைய வேலை இருக்கிறது என்று கூறியவர் ஹாக்கிங்.

மறு பிறவி என்பதோ சொர்க்கம் என்பதோ கிடையாது என்றும் ஹாக்கிங் திட்டவட்டமாக கூறியவர். அதெல்லாம் ஜாலிக்காக பரப்பப்பட்ட கட்டுக்கதைகள் என்றும் ஹாக்கிங் கூறியுள்ளார்.

மக்களின் மரண பயத்தை போக்கவே இதுபோன்ற கதைகளை சிலர் கிளப்பி விட்டதாகவும், அதுவே வழி வழியாக மக்களின் நம்பிக்கையாக மாறிப் போய் விட்டதாகவும் கூறுகிறார் ஹாக்கிங். மூளை உயிருடன் இருக்கும் வரைதான் எல்லாமே. அது செயலிழந்து விட்டால் அனைத்தும் முடிந்து போய் விடும். அதன் பிறகு எதுவுமே கிடையாது.

நான் கடந்த 49 வருடமாக மரணத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறேன். எனக்கு மரண பயம் சுத்தமாக இல்லை. ஆனால் மரணிக்க நான் அவசரப்படவில்லை. நிறைய செய்ய வேண்டும் நான் நிறைய சாதிக்க ஆசைப்படுகிறேன். பல விஷயங்களை நான் இன்னும் கற்றுக் கொள்ளவே இல்லை. அதையெல்லாம் செய்ய வேண்டும். கடந்தமாதம் தனது 76 வயதில் காலமானார்.

## காதல் கதைகளும், அனுபவித்த வதைகளும்!

05 ம் பக்க தொடர்ச்சி....







ஆனால், ஹாக்கிங் சுற்றத்தில் இருந்தவர்கள், எலைன் மருத்துவம் செய்கிறேன் என்ற பெயரில் உடல் அளவிலும், மன அளவிலும் உலகின் சிறந்த அறிவியலாளரை துன்புறுத்தி கொடுமை செய்து வந்தார் என்று கூறினார்கள். எலைன் மீது இந்த குற்றச்சாட்டு பலரால் முன்வைக்கப்பட்டது.

ஆனால், ஹாக்கிங் இதுக்குறித்த தகவல்களுக்கு மறுப்பு தெரிவித்தார். ஆனால், 2000ல் ஹாக்கிங் அறுப்பு காயங்களுக்கு மருத்துவம் செய்ய மருத்துவமனை சென்றார். இது ஏன் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு ஹாக்கிங் பதில் அளிக்கவில்லை. இந்த சம்பவம் நடந்த மூன்று ஆண்டுகளுக்கு பிறகு, ஹாக்கிங்கின் மகள் லூசி தனது தந்தைக்கு தவறான மருத்துவம் செய்யப்படுவதாக புகார் எளிதார்.

குற்றங்கள்!

அப்போது எலைன் மேசன் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன... ஹாக்கிங்கின் மணிக்கட்டு பகுதியை சக்கர நாற்காலியில் அடித்து உடைத்தது. ஹாக்கிங்கிற்கு சிறுநீர் கழிக்கும் பாட்டிலை பொருத்தாமல், அவர் தன் மீதே சிறுநீர் கழிக்க செய்து, அந்த ஈரத்துடன் இருக்க செய்தது. பிளேடு காயங்கள் ஏற்படுத்தியது. குளிக்கும் போது, கீழே விழ செய்து, அவர் சுவாசிக்கும் குழாய்க்குள் நீர் புக முயற்சி செயடஹ்து. வெப்பம் அதிகமாக இருந்த நாளில், அவரை வெயிலில் தனியாக விட்டு, சூட்டினால் ஹீட்ஸ்ட்ரோக் உண்டாக்க முயற்சித்தது, என பல குற்றங்கள் சுமத்தப்பட்ட போதிலும், எலைன் மேசன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட இணைப்புச் சந்தா £/€69

SET TOP BOX INCLUDED

புதுப்பித்தல் £/€49 14 மாதங்கள்



50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

விஜய் · தமிழ் · KTV · Sun Music · ஆதவன் HD · Jaya TV HD · Lyca

INCLUDED

TENT KOTTA

1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்

4K / HD / 5.1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்



ORION DIGITAL

திரையரங்கில் வெளியாகும் அதேநாளில் புத்தம் புதிய திரைப்படங்கள்



**DOWNLOAD VIDEOS**

Look for this symbol to Download TV episodes to watch on the go without using data

MOBILE & TABLET · App Store · Google Play

**OFFLINE VIEWING FEATURES**

நிகழ்ச்சிகளை DOWNLOAD செய்து, INTERNET இணைப்பின்றி உங்களுக்கு விரும்பிய நேரத்தில் பார்க்கும் வசதி

* Selected channels only

UNITED KINGDOM 0207 132 2727

GERMANY 069 1200 7102

FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

www.lycatv.tv



# சிலப்பதிகார சமையல்

**சேரலன்**

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் - எமக்கு உச்சகட்ட ஆச்சர்யம் அளித்ததே இந்த நூல் தான். இதன் ஒவ்வொரு சொல்லும் பாடலும் பொன்னால் பொறிக்கப்படவேண்டியவை.இந்நூலை அறியாதவரும் உளரோ ?

இப்படியும் ஒரு மனிதரா என்று வியக்கும் அளவு பெருந்தன்மை உடையவராய்,மூன்று வேந்தரை சமமாய் புகழ்ந்து,மூன்று நாட்டிற்க்கும் முறையே மூன்று காண்டங்கள் வைத்து,ஒரு சாதாரண வணிகர் குடியிலே பிறந்த ஒரு தமிழ்மகளை பாட்டுடைத் தலைவியாக்கி. இன்றும் அவளை தமிழ் பெண்களுக்கு இலக்கணமாய் புகழவைத்த அந்த கவியை ஏத்தாத நாவென்ன நாவோ ? மண் பிறந்த மகளை வானுறையும் தெய்வத்துள் வைத்த சிலம்பை படிக்காத கண்ணென்ன கண்ணோ?


தமிழர் வாழ்வியலுக்கு சிலப்பதிகாரம் ஒரு கலைக்களஞ்சியம், இதில் சொல்லப்படாத விடயங்களே இல்லை எனும் அளவுக்கு செய்திகள் மலிந்துகிடக்கின்றன. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் நம் நாவை கிள்ளும் இடங்களும் உண்டு. இதனால் பண்டைய தமிழ் சமூகத்தின் உணவு முறைகளை அறிந்து கொள்ள முடிகிறது.

இந்திரவிழா ஊர் எடுத்த காதையில் இளங்கோ புகார் நகர வீதிகளில் விற்ற பண்டங்களை பட்டியல் இடுகிறார்.
"கூலம் குவித்த கூல வீதியும் காழியர், கூவியர், கள் நொடை ஆட்டியர்,மீன் விலைப் பரதவர், வெள் உப்புப் பகருநர்,பாசவர், வாசவர், பல் நிண விலைஞரோடு"

பருப்பு வகைகள் விற்பவர், பிட்டுவாணிகர்,அப்ப வாணிகர் இதோடு உப்பு விற்பவர், மீன் விற்பவர் மற்றும் ஊன் ( இறைச்சி ) விற்பவர் நிறைந்து புகார் நகர வீதிகள் காணப்பட்டன.

இந்திரவிழாவின் போது மக்கள் என்னென்ன பண்டங்களை நாளங்காடி பூதத்திற்கு வைத்து வழிபட்டார்கள் என்று கூறுமிடத்து ஒரு பெரிய உணவு பட்டியலையே இளங்கோவடிகள் நமக்குத் தருகிறார்.
„புழுக்கலும், நோலையும், விழுக்கு உடை மடையும், பூவும், புகையும், பொங்கலும், சொரிந்து துணங்கையர், குரவையர், அணங்கு எழுந்து ஆடி"
அவரை துவரை முதலிய முதிரைப் பண்டங்களை வேகவைத்த புழுக்கலையும், எள்ளுருண்டையினையும், நிணத்துடன் கூடின சோற்றையும், பூவினையும், புகையினையும், பொங்கற் சோற்றினையும பெய்து வழிபட்டார்கள்.
மதுரை நகரின் புறஞ்சேரியில் மாதிரி என்ற ஆயர்ப்பெண்ணின் வீட்டில் கோவலனும் கண்ணகியும் தங்கியிருக்கின்றனர், கோவலன் கண்ணகியின் சிலம்பை விற்கச்செல்லும் முன் மாதரி கொடுத்த பொருட்களை கொண்டு தன் கையால் உணவு சமைத்து கோவலனுக்கு பரிமாறுகிறாள், அந்த இடத்தில் வரும் சமையல் குறிப்புகள்

"இடைக்குல மடந்தையர், இயல்பின் குன்றாமடைக்கலம்-தன்னொடு மாண்பு உடை மரபின் கோளிப் பாகல் கொழுங் கனித் திரள் காய், வாள் வரிக் கொடுங் காய், மாதுளம் பசுங் காய், மாவின் கனியொடு வாழைத் தீம் கனி,சாலி அரிசி, தம் பால் பயனொடு,'கோல் வளை மாதே! கொள்க' எனக் கொடுப்ப"





ஆயர் குலத்து மகளிர் மாதரி கூறிய தன்மையிற் குறையாத சமைத்தற்குரிய கலங்களுடனே, மாட்சிமையுடையோர் கொடுக்கும் தன்மை போலப் பூவாது காய்க்கும் பலாவினுடைய கொழுவிய திரண்ட முதிர்ந்த காயும்,வளைந்த வரிகளையுடைய வெள்ளரிக்காயும், கொம்மட்டி மாதுளையின் இளங்காயும், மாம்பழமும் இனிய வாழைப்பழமும், செந்நெல் அரிசியும் ஆகிய இவற்றை, தம்குலத்திற்குரிய பாலுடனும் நெய்யுடனும், திரண்ட வளையலை யணிந்த மாதே கொள்வாயாக வென்று சொல்லிக் கொடுக்க அதை வாங்கி கண்ணகி சமைத்தாள்.
இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை கொண்டிருந்த தமிழர்களின் வாழ்வியலின் கூறுகளை அறிந்துகொள்ள சிலம்பு ஒரு முக்கிய கருவி என்பதில் சிறிதும் ஐயமில்லை.





## நான் என்ன தாமரையா ஆண்கள் ஒளிபட்டு மலர?

நடிகையும் பாடகியுமான ஆண்ட்ரியா தமிழில் கமல்,சரத்குமார்,கார்திக் போன்ற பல முன்னணி நடிகர்களுடன் நடித்தவர்.சமீபத்தில் இயக்குனர் ராம் இயக்கத்தில் வெளிவந்த தரமணி படத்தில் தனது தரமான நடிப்பை வெளிப்படுத்தி இருந்தார். அந்த படத்தில் இவருக்கு விருதுகள் கூட கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.


ஆனால் அந்த படத்தில் நன்றாக நடித்திருந்தும் அந்த படத்திற்கு பிறகு எந்த படவாய்ப்புகளும் வரவில்லை இதனால் தான் நிர்வாவானகவும் நடிக்க தயார் என்று ஆண்ட்ரியா கூறியுள்ளார்.சமீபத்தில் இதுபற்றி கூறிய அவர் தரமணி படத்தில் எனது நடிப்பிற்கு நல்ல பெயர் கிடைத்தும் அந்த படத்திற்கு பின்னர் தனக்கு எந்த பட வாய்ப்புகளும் வரவில்லை என்றும் தற்போது படத்திற்கு தேவைப்பட்டால் நான் நிர்வாணமாகவும் நடிக்க கூட தயாராக உள்ள தாகவும்.மேலும் ஒரு சில நடிகைகள் படங்களில் தேவையே

இல்லாமல் கவர்ச்சியை காட்டுகின்றனர் அது தமக்கு பிடிக்கவில்லை அப்படி நடிப்பதற்கு நிர்வாணமாக நடிப்பது எவ்வளவோ மேல் என்று மிகவும் காட்டமாக கூறியுள்ளார் ஆண்ட்ரியா.மேலும் விஜய் படத்தில் ஒரு சில பாட்டிற்கு மட்டும் நடனமாடிய நடிகை எல்லாம் தற்போது 4,5 படங்களில் நடிக்கிறார் ஆனால் திறமை இருந்தும் தனக்கு எந்த பட வாய்ப்பும் தேடி வரவில்லை என்று நடிகை ஆண்ட்ரியா கோபத்துடன் கூறியுள்ளார்.

தன்னை அடையாளம் காட்ட ஒரு சிறந்த முன்னணி நடிகர் தேவைப்படுகிறது. இது சினிமாவுலகில் பெண்களுக்கான சாபக்கேடு. இது வீட்டிலும் சரி திரையிலும் சரி ஆண்கள் ஒளிபட்டாலே அடையாளம் தெரிகிறது. அப்படி அடையாளம் காட்டப்பட்டாலும் எத்தனை நாட்களுக்கு தனியாக ஜொலிக்கமுடியும்? நான் என்ன தாமரையா ஒளிபட்டு மலரலண்டன் :

# லண்டனில் "கட்டப்பா" சத்யராஜின் சிலை?

லண்டன் : உலகப்புகழ் பெற்ற லண்டன் மேடம் டுசாட்ஸ் மெழுகுச்சிலை அருங்காட்சியகத்தில் நடிகர் சத்யராஜின் சிலையும் இடம் பெற உள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் முதன்முதலில் தமிழர் சத்யராஜின் மெழுகு சிலை இடம்பெறப் போகிறது என்பது குறிப்பிடத்தக்கது. 1978 முதல் தமிழ்த்திரையுலகில் வில்லன், ஹீரோ, குணச்சித்திர நடிகர் என்று பலரின் அபிமானங்களைப் பெற்ற நடிகராக வலம் வருகிறார் சத்யராஜ். கோவையைச் சேர்ந்த தமிழரான இவர் பெரியார்,எம்ஜிஆர் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர். பெரியார் கொள்கைகள் மீது கொண்ட ஈர்ப்பால் பெரியார் திரைப்படத்தில் பணம் வாங்காமலே பெரியார் வேடமிட்டு நடித்துக் கொடுத்தார்.



தமிழர்களின் பிரச்னைகளுக்கு முதன்முதலில் குரல் கொடுப்பவரும் சத்யராஜே. காவிரி விவகாரம், முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்டோரின் தூக்கு தண்டனைகளை எதிர்த்தும் குரல் கொடுத்து வருபவர். அண்மையில் பெரியார் சிலை உடைப்பு விவகாரம் தமிழகத்தில் விஸ்வருபபெமடுத்த போதும் கூட தன்னுடைய எதிர்ப்பை வீடியோ மூலம் வெளியிட்டார்.

தமிழராகவும், நடிகராகவும் தன்னுடைய பணியை நேர்த்தியாக செய்து வருபவர் சத்யராஜ். எஸ்எஸ் ராஜமௌலி இயக்கத்தில் வெளியான பாகுபலி முதல் பாகம் மற்றும் இரண்டாம் பாகத்தில் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருந்தார் சத்யராஜ்.

பாகுபலி 2 வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது பாகுபலியை கொன்றது யார் என்ற கேள்வி. இந்த கேள்விக்கான பதிலாக கட்டப்பாவின் கதாபாத்திரம் மிக பிரபலமாக பேசப்பட்டது. சத்யராஜ் கட்டப்பா கதாபாத்திரமாகவே வாழ்ந்து காட்டி இருந்தார்.

பாகுபலி 2 படத்தின் பிரம்மாண்டங்கள் பிரபாஸ், அனுஷ்கா நடிப்பைப் போல சத்யராஜின் நடிப்பும் இந்தப் படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. இந்நிலையில் லண்டனில் உள்ள உலகப் புகழ்பெற்ற மேடம் டுசாட்ஸ் மெழுகுச்சிலை அருங்காட்சியகத்தில் "கட்டப்பா" சத்யராஜின் சிலை வைக்கப்பட உள்ளது.







கே.எஸ். சுதாகர்

சனசந்தடியான நாற்சந்தி. சந்தியிலிருந்து தெற்குப்புறமாக நாலைந்து கடைகள் தாண்டினால் "பிறின்ஸ் றெஸ்ரோரன்" வரும். சுமாரான கடை. ஜனகன் பெரும்பாலான நாட்களில் தனக்குத் தேவையான உணவை அங்குதான் எடுத்துச் செல்வான்.
"பிறின்ஸ்" என்று குறிப்பிட்டுச் சொல்லும்படியாக அங்கு யாரும் வேலை செய்வதாகத் தெரியவில்லை. ஒரு வயது முதிர்ந்தவர் திருநீற்றுப்பூச்சுடன் பக்திப்பாடல்களை முணுமுணுத்தபடி கல்லாவில் இருப்பார். அவரின் மனைவியும், கூடமாட எடுபிடி வேலை செய்யும் ஒரு பையனும் அங்கே இருப்பார்கள். சமயல் அறைக்குள் யார் யாரெல்லாம் இருப்பார்கள்?

சமீப நாட்களாக குசினிக்குள் வேலை செய்யும் ஒருவர், மறைவாக ஒழித்து நின்று ஜனகனைப் பார்க்கின்றார். ஜனகனும் அதை அறிவான். கண்களைப் பார்த்தால் பெண்போல இருக்கின்றாள். ஒருபோதும் நேரில் கண்டதில்லை.
ஜனகன் கம்பீரமான உயர்ந்த இளைஞன். கூரிய மூக்கு. அளவாக வெட்டப்பட்ட மீசை. ஸ்ரைல் கண்ணாடி. பார்த்த மாத்திரத்தில் எல்லோரையும் கவர்ந்திழுக்கும் தோற்றம்.
எப்போதும் அயன் செய்யப்பட்டு மடிப்புக் குலையாத ஆடை. சமயத்தில் தருணத்திற்கேற்றபடி நகைச்சுவையை அள்ளி வீசுவான். கல்லாவில் இருக்கும் முதியவருடன் அடிக்கடி பேச்சுக் கொடுப்பான்.கொஞ்சம் அரசியல், கொஞ்சம் சினிமா.
இன்று காலை கடையில் அலுவலை முடித்துக் கொண்டு வெளியேறுகையில் அவனுக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது.
கசக்கி எறியப்பட்ட கடதாசித் துண்டு ஒன்று அவன் கால் முன்னே வந்து விழுந்தது. குப்பைக்கூடைக்குள் அதை எறியப்போனவன், ஏதோ ஒரு யோசனை வந்ததில் அதை பிரித்துப் பார்த்தான். நீங்கள் தனியாகவா இருக்கின்றீர்கள்? என அதில் எழுதி இருந்தது.
ஜனகனின் மனம் குழம்பியது. குரங்கு போலக் கும்மியடித்தது. அன்று அவனால் ஒழுங்காக வேலை செய்யமுடியவில்லை. வீட்டிற்கு வந்தால் உறங்க முடியவில்லை. இதற்கு என்ன பதில் சொல்வது? பெண்ணை நேரில் பார்க்காமல் எப்படி?
அது எப்படி ஒருநாளும் சந்திக்காமல் கதைக்காமல் "நீங்கள் தனியாகவா இருக்கின்றீர்கள்?" என்று கேட்க முடியும். ஜனகனின் மனம் புழுவாய்க் குடைந்தது. ஒருவேளை முதலாளியுடன் கதைப்பதை வைத்துக் கொண்டு தன்னை நல்ல ஆண்மகன் என அவள் முடிவெடுத்திருக்கலாம். இருப்பினும் அடுத்தநாள் காலை கடை திறப்பதற்கு முன் காத்திருந்து அந்தப் பெண்ணைப் பார்த்துவிடலாம் என முடிவு செய்தான் ஜனகன். எதிர்ப்புறக் கடையில் ஒளித்திருந்தான்.
கடை முதலாளி காரை கடை முகப்பில் நிறுத்துகின்றார். முதலாளி அம்மாவும் ஒரு பெண்ணும் காரில் இருந்து இறங்குகின்றனர்.
ஏதோ சில பொருட்களை இறக்குகின்றனர். முதலாளி அவர்களுடன் ஏதோ கத்திக் கதைத்துவிட்டு காரைப் பின்புறமுள்ள தரிப்பிடம் நோக்கிச் செலுத்துகின்றார்.
அந்தப் பெண் பதட்டமடைந்தவளாக திரும்பி சுற்றுமுற்றும் பார்த்தாள்.
தரிசனம் கிடைத்தது. ஜனகன் எதிர்பார்த்ததைவிட அழகாக இருந்தாள். மெல்லிய அந்தப் பெண் அவர்களின் மகளாக இருக்கலாம். அவளே பிறின்ஸ் என்று ஜனகனின் மனம் அடித்துச் சொன்னது.
ஜனகன் வீட்டிற்கு அரக்கப்பரக்க ஓடினான். மேல் ஆடையைக் கழற்றிவிட்டு ரி சேட் ஒன்றை மாட்டினான். அதன் முன்னும் பின்னும் கொட்டை எழுத்தில் 'Yes' என்று எழுதி இருந்தது. அந்த ரி சேட்டிற்கு பலன் கிட்டியது. அன்று விழுந்த பேப்பரில்:

'நான் ஆபத்தில் சிக்கியுள்ளேன். இவர்கள் என்னைத் தினமும் சித்திரவதை செய்கின்றார்கள், துன்புறுத்துகின்றார்கள். உங்களால் எனக்குப் பாதுகாப்புத் தர முடியுமா? பதிலை கடை வாசலில் உள்ள பூச்சாடியின் கீழ் வைக்கவும்'

நான்கு நாட்களின் பின்பு இந்த விளையாட்டு ஒரு முடிவுக்கு வந்தது.ஒருநாள் காலை முதலாளியின் கார் வரும் திசைக்கு எதிராக ஜனகன் தனது காரை நிறுத்தி வைத்திருந்தான். அந்தப்பெண் காரை விட்டு இறங்கியதும், குறுக்காக ஓடி ஜனகனின் காருக்குள் ஏறிக் கொண்டாள். கார் நகரத் தொடங்கியது.
காரின் பின் சீற்றைத் திறந்து ஏற முற்பட்ட அவளை, ஜனகன் முன்னால் வந்து ஏறும்படி கத்தினான். கார் மெதுவாக நகரும்போதே அவள் முன் கதவைத் இழுத்துத் திறந்து தாவி ஏறினாள்.

உங்கள் பெயர்? முதன் முதலாக ஜனகன் அவளின் பெயரைக் கேட்கின்றான். சிவானி. நீங்கள்? "நான் ஜனகன்."

"நாங்கள் இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம்?" ஓடிவந்த களைப்பில் சிவானிக்கு மூச்சு இரைந்தது.
"உமக்கு முதல்ல நாலு நாட்கள் ஹோட்டல் எடுத்து வைச்சிருக்கிறன். அதுக்குப் பிறகு றென்றுக்கு விடு ஒண்டு பாக்கலாமெண்டிருக்கிறன். தூரமா எடுத்தா உமக்கு நல்லாய் இருக்கும்" சொல்லியபடி ஸ்ரியரிங் வீலில் இருந்த தனது இடது கையை எடுத்து அவளின் வலதுபுற மணிக்கட்டில் வைத்து அழுத்தினான். சிவானி அதற்கு ஒன்றும் சொல்லாமல் ஜனகனை நிமிர்ந்து பார்த்தாள். கார் ஒரு தடவை ஆட்டம் கண்டு பின்னர் நெடுஞ்சாலையில் வேகமெடுத்து ஓடியது. ஹோட்டல் போய்ச் சேரும் வரைக்கும் அவர்கள் இருவரும் அதன்பின்னர் ஒன்றுமே பேசிக் கொள்ளவில்லை.
ஹோட்டலின் கீழ் உணவருந்திவிட்டு, திறப்பை எடுத்துக் கொண்டு அறைக்குப் போனார்கள். அதன் பின்னர் இருவரும் சொப்பிங் சென்ரர் சென்று, சிவானிக்குத் தேவையான உடுப்பு முதல் சகலதும் வாங்கிக் கொண்டார்கள்.
மீண்டும் ஹோட்டல் சென்று சிவானியை இறக்கிவிட்டு ஜனகன் புறப்படும்போது.அப்ப நீங்கள் இங்கே தங்கமாட்டீர்களா? என்று ஏக்கமாகக் கேட்டாள் சிவானி.
"பாதுகாப்புத் தர முடியுமா" என்றுதானே கேட்டீர்கள். தந்துவிட்டேன். அவுஸ்திரேலியாவில் சகல மனிதரும் பாதுகாப்பாக வாழ முடியும்.
அடிக்கடி உங்களை வந்து பார்க்கின்றேன். நீங்கள் சிறிது காலம் மறைந்து வாழ்ந்தால் நல்லது என நினைக்கின்றேன்.
நீங்கள் முதலில் உங்கள் உறவினருக்கு ஒரு கடிதம் எழுதித் தாருங்கள். நான் போகும்போது போஸ்ற் பண்ணி விடுகின்றேன்."
சிவானி பேனைய எடுத்ததும் அவள் கைகள் நடுங்கின. அந்த நடுக்கத்தில் எழுத்துகள் கோணல் மாணலாக கடிதத்தில் விழுந்தன.
"நீங்கள் இதுவரை எனக்குச் செலவழித்த பணம் அத்தனையையும் கூடிய விரைவில் தந்துவிடுவேன். என்னை இங்கு அவுஸ்திரேலியாவிற்குக் கூப்பிட்டு விட்டதற்கு மிகமிக நன்றி. என்னைத் தேட வேண்டாம். நான் எனக்குரிய வழியில் செல்கின்றேன்." கடிதத்தைப் புரிந்துகொள்ள ஜனகன் திண்டாடினான். ஜனகன் போகும்போது புதிதாக வாங்கிய ஒரு "சம்சுங்" போனை சிவானியின் கைகளிற்குள் பொத்தித் திணித்தான்.
"ஏதாவது தேவை என்றால் இந்த நம்பருக்கு அடியுங்கோ" தனது நம்பர் எழுதிய துண்டொன்றையும் சிவானியிடம் கொடுத்தான்.
சிவானி அந்தத் துண்டை வாங்கும்போது, கார் ஸ்ரெயறிங்கில் உள்ள அவன் கை மீது தனது அழகு விரல்களைப் படரவிட்டபடி பட்டென்று "நான் உங்களை விரும்புகின்றேன்" என்றாள்."நான் ஏற்கனவே திருமணம் செய்தவன். எனக்கு மனைவியும் இரண்டு பிள்ளைகளும் இருக்கின்றார்கள்" என்றான் ஜனகன். "என்ன இது புதுக்கதை விடுகின்றீர்கள்?" என்றாள் சிவானி



# கனடா "தமிழர் தகவல்" சஞ்சிகையின் "இளந்தளிர்ச் சுவடு" ; வெளியீடும் 27வது ஆண்டு விருது விழாவும்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்



இணை ஆசிரியர்
திருமதி. றஞ்சி திருச்செல்வம்









கனடாவின் மூத்த தமிழ் இதழும், கனடியத் தமிழரின் அடையாளமாக சர்வதேசத்தால் அறியப்பட்டதுமான 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் 27வது ஆண்டு பூர்த்தி மலர் இளந்தளிர்ச் சுவடு வெளியீடும், 27வது ஆண்டு விருது விழாவும் பெப்ரவரி மாதம் 25ம் திகதி ரொறன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபாபீடத்தில் நடைபெற்றது. இளந்தளிர்ச் சுவடு வெளியீடுடன் தொடர்புடைய முதல் அமர்வுக்கு தமிழர் தகவல் இணை ஆசிரியர் திருமதி. றஞ்சி திருச்செல்வம் தலைமை தாங்கினார்.

தமிழாலயம் நிறுவனர் திரு. கலாராஜன் விழாவைத் தொடக்கி வைத்து உரை நிகழ்த்தினார். செல்வி ஐஸ்வரியா சந்துருவின் தமிழ் வாழ்த்து, சிவசிறீ சி. ஜெயகாந்தக் குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து, எழுத்தாளரும் ஒலிபரப்பாளரும் நாடகக் கலைஞருமான திரு. கந்தசாமி கங்காதரன் மலர் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச் செல்வம் அவர்களின் குறிப்புரையைத் தொடர்ந்து உதவி ஆசிரியர் திரு. சசிதரன் பத்மநாதன் மூத்த எழுத்தாளர் திரு. அ.முத்துலிங்கம் அவர்களுக்கு சிறப்புப் பிரதியை வழங்கி மதிப்புச் செய்தார். மார்க்கம் நகரசபை உறுப்பினர் திரு. லோகன் கணபதியின் வாழ்த்துரையைத் தொடர்ந்து ஒலிபரப்பாளர் வி.என்.மதிஅழகன் விருது பெற்றவர்கள் சார்பில் உரையாற்றினார்.

ரொறன்ரோ நகரசபை- உறுப்பினர் திரு.நீதன் சண் தலைமையில் விருது விழா இடம்பெற்றது. பேராசிரியர் அ.ஜோசப் சந்திரகாந்தன் முதன்மை உரை நிகழ்த்தினார். கனடாவின் முதலாவது கறுப்பின பெண் அமைச்சரும், கனடாவில் பெப்ரவரி மாதத்தை கறுப்பின வரலாற்று மாதமாக பிரகடனப்படுத்திய முதன்மையாளருமான ஜீன் அகஸ்தீன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியதோடு, விருதுகளையும் வழங்கி பெருமை சேர்த்தார்.

இவ்வருட விழாவில் எண்மர் விருதுகள் பெற்றனர். மனிதாபிமான நேயப் பணிக்கான சிறப்பு விருது ரொறன்ரோ பொலிஸ் உத்தியோகத்தர் திரு. நிரான் ஜெயநேசனுக்கு வழங்கப்பட்டது. தமிழ்ப்பணிசார் பன்முக ஆளுமை விருது திரு. பொன்னையா விவேகானந்தனுக்கும், இறைபணியும் சமூகப்பணியும் கலந்த சேவை விருது சிவசிறீ ப. கிருஷ்ணராஜ குருக்களுக்கும், ஆடற்கலைக்கான விருது அற்புதராணி கிருபராஜ் அவர்களுக்கும், தமிழ்த் திரைத்துறை முன்னோடி ஒளிப்பதிவாளர் விருது கலைஞர் ரவி அச்சுதனுக்கும், சவால் நிறைந்த வணிகத்துறையின் சாதனைத் தமிழர் விருது திரு. சிவதர்மன் விலோசனனுக்கும், ஒலிபரப்புத்துறை சாதனை விருது திரு.வி.என்.மதிஅழகனுக்கும், வாத்திய இசைக்கலைக்கான ஷபாம் மக்கொனால்' நினைவு இளையோர் சாதனை விருது செல்வி ஹரிணி ஸ்கந்தராஜாவுக்கும் வழங்கப்பட்டது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் பளிங்கு விருதுக் கேடயம், அதற்கான சான்றுப் பட்டயம் ஆகியவற்றுடன் தங்கப்பதக்கமும் சூட்டப்பட்டது. விருதாளர்களை சட்டவாளர் மனுவல் ஜேசுதாசன், மருத்துவர் கதிர் துரைசிங்கம், மருத்துவர் சிவானி சிறீதரன், குயின்ரஸ் துரைசிங்கம், அனோஜினி குமரதாசன் ஆகியோர் அறிமுகம் செய்தனர். விருதாளர்கள் சார்பில் நிரான் ஜெயநேசன் ஏற்புரை வழங்கினார். செல்வி ஹரிணியின் வயலின் இசை மூலமான தேசிய கீதத்துடன் விழா நிறைவு பெற்றது.


Fly2go.net

சித்திரைத் தமிழ் புத்தாண்டு முதல்

Book Now, Pay Later

24 வருட நம்பிக்கையும் நாணயமும் கொண்ட நிறுவனம்



Flight Online Booking

Book your flight online
1. உங்களுக்கு ஏற்ற விமானத்தை தேடவும்
Search flight.
2. உங்களுக்கு ஏற்றதை தெரிவு செய்யவும்
Select your preferred flight.
3. பதிவுக்கான முழுவிபரங்களையும் தரவும்
Complete the booking details.

Plan your trip in seconds

உங்கள் பயணங்களை
சில விநாடிகளில் திட்டமிடலாம்!

At the Check-out, please choose the payment option
Book Now, Pay Later. Click confirm, we will send you
a reservation copy by e-mail.

நீங்கள் தெரிவு செய்து அனுப்பியதும்
உங்களுக்கு பதிவு செய்தமைக்கான
பிரதி அனுப்பப்படும்.
பணம் கட்டியதும் பயணச்சீட்டு
அனுப்பிவைக்கப்படும்

Offnungszeiten.
montags bis Samstag
09:00- 21:00





Travel Air- Ackerstrasse 31
:40233 Düsseldorf
Tel: 0176 47 69 36 43
Tel: 0211 38838699 Tel: 0202 2443104
Info@travelair.de

# அசைக்க முடியாத பெண்மணியாக யேர்மனியில் அரசமைக்கிறார் ஏஞ்சலா மெர்க்கல்!

## 4 ஆவது முறையாக ஜேர்மனியின் கான்சிலரானார் !!!

**வ.சிவராசா யேடமனி.**





யேர்மனிய அரசியலமைப்பு விதிப்படி நான்கு ஆண்டுகளுக்கு ஒருதடவை பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெறுவது வழக்கமாகும். அந்த வகையில் 2017 செப்டெம்பரில் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது எந்தக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாத காரணத்தால் கூட்டாட்சி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
ஆனால் பிரதான கட்சிகளில் ஒன்றாக விளங்கிய ஞீனு கட்சி கூட்டரசில் இணங்க முதலில் மறுத்த காரணத்தால் CDU, CSU, FDP, Grünen கட்சிகள் ஒன்று சேர்ந்து அரசு அமைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. பின்னர் கட்சிகளிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தன.
தொடர்ந்து பிரதான கட்சிகளான CDU, CSU கட்சிகளுக்கும் SPD கட்சிக்குமிடையே பேச்சுவார்த்தை பல சுற்றுக்களில் இடம்பெற்று இறுதியில் பிரதான கட்சிகள் மூன்று கட்சிகளும் சேர்ந்து மீண்டும் ஆட்சி அமைக்க இணக்கம் காணப்பட்டது.
4 ஆவது முறையாக ஜேர்மனியின் சான்சிலரானார் ஏஞ்சலா மெர்க்கல் பலம் பொருந்திய ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாக திகழும் ஜேர்மனியில் கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் ஏஞ்சலா மெர்க்கல் சான்சிலராக பதவி வகித்து வருகிறார். தொடர்ந்து 3 முறை தொடர்ச்சியாக வெற்றி பெற்றவர் என்ற சிறப்பும் அவருக்கு உண்டு.

இந்த நிலையில் அந்நாட்டில் பாராளுமன்ற தேர்தல் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இடம்பெற்றது. இதில் ஏஞ்சலா மெர்க்கலின் பழமைவாத கட்சி (சி.டி.யூ.) மற்றும் ஹோர்ஸ்ட் சீஹோபரின் கிறிஸ்தவ ஜனநாயக ஒன்றியம் (சி.எஸ்.யூ.) ஆகியவை கூட்டணி அமைத்து போட்டியிட்டன.

மெர்க்கலுக்கு அதிக ஆதரவு இருந்தாலும், 246 இடங்களையே அந்த கூட்டணி கைப்பற்றியது. மேலும், கடந்த முறை அந்த கூட்டணி பெற்ற வாக்குகள் 41.5 சதவீதத்தில் இருந்து 32.9 சதவீதமாக குறைவடைந்தது.
அதேநேரம், அகதிகளுக்கு அடைக்கலம் அளிப்பது தொடர்பான விவகாரத்தில் ஏஞ்சலா மெர்க்கலுக்கு எதிர்ப்பு தெரிவித்து பழமைவாத கூட்டணியில் இருந்து தேர்தலுக்கு முன்பே விலகிய எஸ்.பி.டி. கட்சி 153 இடங்களை கைப்பற்றியது. ஏ.எப்.டி. 94 இடங்களிலும், எப்.டி.எப். 80, டி லிங்கே, 69, கிரீன் கட்சி 67 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

கடந்த ஜனவரி மாதம் மெர்கெலுக்கு ஆதரவளிக்க தயார் என எஸ்.பி.டி கட்சி அறிவித்தது. இந்நிலையில், அந்நாட்டு பாராளுமன்ற கீழ் சபையில் நடந்த வாக்கெடுப்பில் சி.எஸ்.யூ - சி.டி.யூ, எஸ்.பி.டி உறுப்பினர்கள் ஆதரவுடன் அவர் வெற்றி பெற்றார். 355 உறுப்பினர்கள் ஆதரவு தேவை என்ற நிலையில், 364 உறுப்பினர்கள் ஆதரவு மெர்கெலுக்கு கிடைத்தது.

171 நாள் காத்திருப்புக்கு பின்னர் சான்சிலராக பொறுப்பேற்றுக்கொள்வார் என உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெர்மனியின் கான்சிலராக ஏஞ்சலா மெர்க்கெல் நான்காவது முறையாக பதவியேற்றார். தேர்தலுக்குப் பின் ஏறத்தாழ 6 மாதங்கள் அரசியல் குழப்பம் நீடித்து வந்த சூழலில், நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் பெரும்பான்மைக்குத் தேவையானதைவிட 9 வாக்குகள் மட்டுமே கூடுதலாகப் பெற்று அவர் கான்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
ஜெர்மனி நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல், கடந்த ஆண்டின் செப்டம்பர் மாதம் 24-ஆம் தேதி நடைபெற்றது. இந்தத் தேர்தலில் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல் தலைமையிலான கிறிஸ்துவ ஜனநாயக யூனியன் - கிறிஸ்துவ யூனியன் கூட்டணி அதிகபட்சமாக 33 சதவீத வாக்குகளைப் பெற்று, நாடாளுமன்றத்தில் 246 இடங்களைக் கைப்பற்றியது. சமூக ஜனநாயக கட்சி இடங்களைக் கைப்பற்றி 2-ஆவது இடத்தைப் பிடித்தது. ஜெர்மனியின் மாற்றத்துக்கான கட்சி 94 இடங்களுடன் 3-ஆவது இடத்தைப் பிடித்தது.
எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், அடுத்த ஆட்சியை அமைப்பதற்காக ஏஞ்சலா மெர்க்கெலின் கட்சி இரண்டாவது இடத்தைக் கைப்பற்றிய சமூக ஜனநாயக கட்சியுடன் தீவிர பேச்சுவார்த்தைக்குப் பின் மாபெரும் கூட்டணியை அமைத்தது.
இதையடுத்து, நாடாளுமன்றத்தில் அந்தக் கூட்டணியின் பலம் 399 உறுப்பினர்களாக அதிகரித்தது. இந்தச் சூழலில், புதிய கான்சிலரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு நாடாளுமன்ற கீழவையில் 07-03-2018 அன்று நடைபெற்றது.

அந்த வாக்கெடுப்பில் 364 உறுப்பினர்கள் மெர்க்கெலுக்கு ஆதரவாகவும், 315 உறுப்பினர்களை அவரை எதிர்த்தும் வாக்களித்தனர். இதையடுத்து, அறுதிப் பெரும்பான்மைக்கு 9 வாக்குகள் அதிகமாகப் பெற்று நான்காவது முறையாக ஏஞ்சலா மெர்க்கெல் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
ரகசியமாக நடைபெற்ற இந்த வாக்குப் பதிவில், ஏஞ்சலா மெர்க்கெல்லின் கட்சியைச் சேர்ந்த 35 எம்.பி.க்களே அவருக்கு எதிராக வாக்களித்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. இது மெர்க்கெல்லின் கடினமான புதிய துவக்கத்தைப் பிரதிபலிப்பதாக எதிர்க்கட்சியினர் விமர்சித்தனர்.
வாக்கெடுப்பில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தில் உள்ள அலுவலகத்தில் அவர் பதவிப் பிரமாணம் மேற்கொண்டார்.
ஐரோப்பிய கண்டத்தின் பொருளாதார சக்தியான ஜெர்மனியில், உள்நாட்டுப் போர் நடைபெற்று வரும் சிரியா, ஈராக், ஆபிரிக்கா, ஆசியா போன்ற நாடுகளிலிருந்து வரும் லட்சக்கணக்கான அகதிகளுக்கு அடைக்கலம் அளிப்பது குறித்த பிரச்னை கடந்த ஆண்டில் பூதாகரமாக வடிவெடுத்தது. மனிதாபிமான அடிப்படையில் அதிக அகதிகளுக்குப் புகலிடம் அளிக்கும் மெர்க்கெலின் நிலைப்பாட்டுக்கு பொதுமக்களில் ஒரு சாராரிடையே எதிர்ப்பு எழுந்தது.

தொடர்ச்சி 30 பக்கம்.















## தமிழாலயம் – டோட்மூண்ட் 25 வது அகவை நிறைவு விழா 11.03.2018 ( யேர்மனி)

கடந்த மாதம் 11ம் திகதி ,யேர்மனி டோட்மூண்ட் நகரில், தமிழாலயத்தின் 25 வது அகவை நிறைவு விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழாலயத் தந்தை அமரர் இரா. நாகலிங்கம் ஐயா அவர்களும், அவர்தம் துணைவியார் ஆசிரியை ஆயிலியம் அம்மா, அவர்களையும், நினைவுகூர்ந்து 25 வது அகவை விழா எடுத்தது மிகச்சிறப்பான அம்சமாகும். விழாவில் ஆசிரியர்கள், நிர்வாகிகள் சேவைக்கு மதிப்பளிக்கப்பட்டது. மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளும் உரைகளும் இடம் பெற்றன. யேர்மனியில் தமிழாலயங்களின் சேவை சரித்திரத்தில் பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.





# திருமந்திரமும் வாழ்வியலும் 27

[சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி]

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## திருமந்திரம் கூறும் அந்தணர் ஒழுக்க நெறிகள்

சைவசமய மரபில் ஆலயங்களுக்குள்ளும், வெளியிலும் இறை பணியாற்றும், இறைவனுக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து நாம் போற்றும் அந்தணர்களின் கடமைகள், செயற்பாடுகள், ஒழுக்க நெறிகள் பற்றித் திருமூலநாயனார் திருமந்திரத்தில் கூறியுள்ளதைப் பார்ப்போமானால்.

அந்தணர் ஆற்றும் ஆறு தொழில்கள் பற்றிக் கூறும் பாடல் எண் 224
"அந்தணர் ஆவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பி முப்போதும் நியமஞ்செய்
தம்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே"

வேதம் ஓதுதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், செய்வித்தல், தானம் தருவது, பெறுவது ஆகிய ஆறு பணிகளைச் செய்யும் கடமையுடைய, வேள்வித் தீ வழர்த்து மூன்று வேளையும் நித்திய கடமைகளைச் செய்யும், தங்களுக்குரிய தவ ஒழுக்கம் தவறாது கடைப்பிடித்து, சந்தியா காலங்களில் வேத மந்திரங்கள் ஓதிச் செய்யவேண்டிய நற்கருமங்களை வரையறை செய்பவர்களே மேலான குணநலன்களைக் கொண்ட அந்தணர் ஆவார்.
அந்தணர் செயற்பாடு பற்றிக் கூறும் பாடல் எண் 227

"பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து
குருநெறி யால்உரை கூடிநால் வேதத்
திருநெறி யான கிரியை இருந்து
சொருபமது ஆனோர் துகள்இல்பார்ப் பாரே"

பேரின்பப் பேறு அடைவதற்கு உரிய சிறந்த வழியான பிரணவ மந்திரத்தை மனத்தில் எண்ணித் துதித்து, ஆச்சாரியனாகிய ஞான குருவின் வழிகாட்டுதலின்படி, அவர் உபதேசித்த மந்திரத்தைச் சொல்லி, உயர்ந்த தவமார்க்கமாகிய தியானத்தில் இருந்து, சிவவடிவமாகவே விளங்கப்பெறுபவர்கள் குறையற்ற பார்ப்பனர் ஆவார்கள்.
ஆசையை விட்டவர்களே அந்தணர் எனக் கூறும் பாடல் எண் 229

"வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தம் கேட்டும்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்தம் ஆவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தம் கேட்டவர் வேட்கைவிட் டாரே"

வேதாந்த ஞானம் என்றால் என்ன என்பதை அறிய விரும்பிய வேதியர்கள், வேதாந்த ஞானத்தைக் கேட்டறிந்த பின்னரும், தங்கள் ஆசைகளை, பற்றை விடவில்லை. வேதத்தின் முடிவான வேதாந்தம் என்பது, ஆசைகள் அறுந்த இடம். பற்றுக்கள் விட்ட இடம். எனவே உண்மையாகவே வேதாந்த ஞானம் பெற்றவர்கள் என்று சொல்லப்படும் பெருமைக்கு உரியவர்கள், ஆசையை விட்டவர்களே.
அந்தணர் எப்படி இருக்கவேண்டும் எனக் கூறும் பாடல் எண் 230

"நூலும் சிகையும் நுவலின் பிரமமோ
நூலது கார்ப்பாசம் நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காண நுவலிலே"

பூநூல் அணிந்திருக்கின்ற, குடுமி வைத்துள்ள ஒருவரைப் பிரமத்தை அறிந்தவர், பிராமணர் என்று சொல்லிவிட முடியுமா? நூல் என்பது பருத்திப் பஞ்சாலான மெல்லிய இழை. நுண்சிகை என்பது தலைமுடி. உண்மையில் நூல் என்பது மறைப் பொருள் உணருதல், நுண்சிகை ஞானமார்க்கம். (முப்புரி நூல் என்பதற்கு இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்றும், நுண்சிகை உச்சித்தலை, புருவநடு என்ற பொருளும் உண்டு) நூலணிந்த மறையவர்கள் இங்கே சொல்லியவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும்.
அந்தணர் ஒழுக்கம் பற்றிக் கூறும் பாடல் எண் 231

"சத்தியம் இன்றித் தனிஞானம் தான்இன்றி
ஒத்த விடையம் விட்டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை இன்றிஊண்
பித்தேறும் மூடர் பிராமணர் தாம்அன்றே"

உண்மைத் தவ ஒழுக்கம் இல்லாமல், மெஞ்ஞான அறிவும் இல்லாது, உடலோடும், மனத்தோடும் பொருந்தியுள்ள ஐம்புலன்கள் வழிச் செல்லும் ஆசையை விட்டு விலகும் வழியை எண்ணும் நினைப்பும் இல்லாமல், பக்தி இல்லாமல், எல்லாவற்றிற்கும் மேலான ஒன்று பரம்பொருள் என்ற உண்மை அறிவும் இல்லாமல், உண்ணும் உணவில் ஆசை வைத்து அலையும் பைத்தியக்காரர்கள் பிராமணர் ஆகமாட்டார்கள்.
'யார் அந்தணர் எனக்கூறும் பாடல் எண் 233

"மறை ஓதுவாரே மறையவர் ஆனால்
மறையோர்தம் வேதாந்தம் வாய்மையில் தூய்மை
குறைஓர்தல் மற்றுள்ள கோலா கலம்என்று
அறிவோர் மறைதெரிந்(து) அந்தணர் ஆமே"

வேதம் ஓதுபவர்கள் எல்லாம் வேதியர்கள்தாம். ஆனால் வேதம் ஓதும் வேதியர்களின் வேதாந்தம் உண்மையில் உயர்ந்தது எனினும், மற்றுள்ள குறைபாடுடைய பிற நூல்களைக் கற்றல் என்பது, வீண் ஆரவாரம், வெறும் பகட்டு என்பதைக் கற்றுணர்ந்தவர்களே மறையவர். அதாவது வேதியர் ஆவார்.

நல்ல அந்தணர் வாழும் ஊர் நன்றாக இருக்கும் எனக்கூறும் பாடல் எண் 234
"அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்
அந்தியுஞ் சந்தியும் ஆகுதி பண்ணுமே"

வாழும் உயிர்களிடத்தும் அன்பு காட்டும் மேலான அருள் உள்ளம் கொண்ட, உயர்ந்த வேதப் பொருளைத் தியானித்தபடி இருக்கும் மேன்மக்கள் இருக்கின்ற ஊரில், வளமை குறையாது. அந்த ஊரை (நாட்டை) அரசாளும் மன்னனும் உயர்ந்தவனாக இருப்பான். அதிகாலைப் பொழுதிலும், அந்தி நேரத்திலும் அவ்வூரில் மறையவர்கள் வேள்வித் தவம் செய்வார்கள்.

திருக்கணித ஜோதிடம்
ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி


சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450



யோகன், யோகி:
02823/6838
Mobil:
152 138 22 350
Yogan Deko
சிவகாமி மணவறைச் சோடினை



மித்திரன்
திருமண இலவச சேவை
உங்கள் இல்லற வாழ்வின்
உற்ற துணையை
உறுதியாகத் தேடிக்கொள்ள
உதவும் இலவச சேவை நமது.
தொடர்புகளுக்கு:
மித்திரா:

Tel: 02732 57372- Mobil: 0175 4543 416

# பிள்ளைகள் பெற்றோரைப் பிரிந்து இருக்க விரும்புவது அவர்களது அதீத அன்பா, அல்லது கண்டிப்பா?



றஜினா தருமராஜா


பெற்றோர் என்றாலே அன்பு காட்டுபவர்கள் அல்லவா? அவ்வன்பே சில சமயங்களில் கண்டிப்பாக மாறிவிடுகிறது.
எதற்காக இக்கண்டிப்பு? அச்சம். ஆம், பெற்றோர்களுக்கு தம் பிள்ளைகள் பிழையான வழியைத் தேர்ந்தெடுத்து விடுவார்கள் என்ற அச்சம்.
அன்புடன் கலந்த ஆலோசனைகளைக் கூறிப் பாருங்கள் பிள்ளைகள் உங்கள் கூற்றைக் கேட்டுக்கொள்வார்கள்.

தாய் தந்தையர் கூறும் சொற்களைக் கட்கும் நிலமையில் சிலர் இல்லை. கவலைக்குரிய விடயம். கருத்துகளையெல்லாம் தவறாக ஏற்றுக் கொள்கிறார்கள். அன்பு கண்டிப்பாக மாறும்பொழுது சண்டையில் பிரிவு ஏற்படுகிறது. கண்டிப்பும் இருக்கவேண்டும் ஆனால் அளவோடு இருந்தால் நன்று.
எங்களின் பெற்றோர்கள் எங்களின் வயதைக் கடந்து வந்தவர்கள். அவர்களுக்குத் தெரியாததா? எச்சரிப்பதற்கும் கண்டிப்பதற்கும் பெற்றோருக்கு உரிமையுண்டு. ஆனால் ஒரு வயதுக்கு மேல் சுதந்திரமாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.
சில சமயங்களில் தனிமை உனக்கு நீ யார் என்பதை உணர்த்தும் குருவாகக்கூட அமையலாம்.
சுதந்திரமாக வாழ்வதற்காகப் பிள்ளைகள் பெற்றோரைப் பிரிந்து இருக்க விரும்புகிறார்கள். தனியாக இருக்கும் பொழுது சொந்தக்காலில் நிற்பதற்குப் பழகிக் கொள்கிறார்கள் மற்றும் பொறுப்பு என்பதனைப் புரிந்த கொள்கிறார்கள்.வேறு நகரங்களுக்குச் சென்று மேல்படிப்பினைத் தொடரும் பிள்ளைகள் நிறைய விடயங்களை அறிந்து கொள்கிறார்கள்.

சிலர் இப்படிப்பினைத் தொடரக் கூட முடியாமல் போய்விட்டது.பெற்றோரின் பயத்தினால்.நண்பர்களுடன் பழக விடுவதில்லை. பிள்ளைகள் அஞ்சி அஞ்சி கேட்கிறார்கள் வெளியே செல்லலாமோ என்று. வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்தால் அடுத்த கணமே சரி சொல்பவர்களா? நான் கூறத் தேவையில்லை. உங்களுக்குத் தெரியும் எவ்வித பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று.
ஆம் நண்பர்களே! பெற்றோர்கள் மீது பிள்ளைகளும் பிள்ளைகள் மீது பெற்றோர்களும் அளவுக்கதிகமாக அன்பு கொண்டுள்ளார்கள்.

## தனிமை

### உன்னை நீ அறிவதற்கான காலம்






பிள்ளைகள் நாங்கள் விட்டுக் கொடுத்துநடத்தல் வேண்டும். பெற்றோரின் நிலமையை புரிந்து கொள்ள வேண்டும். பெற்றோரையையும் சகோதரங் களையும் பிரிந்து இருப்பது நலமா? அவர்களைப் பிரிந்து இருப்பதில் என்ன மகிழ்ச்சி? யார் எங்களுக்கு உதவி செய்ய வருவார்கள்? தாயை விட யாரால் பிள்ளையை வளர்க்க முடியும். தந்தையை விட யாரால் சரியான வழியில் கொண்டு செல்லமுடியம்?
சில சமயங்களில் தவறு நடந்துவிடுகிறது. சரிசெய்து கொண்டால் எல்லோரும் ஒற்றுமையுடன் சேர்ந்து வாழலாம். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!






# சங்ககாலம் காட்டும் கண்ணாடி !





தனசேகர் பிரபாகரன்

உலகெல்லாம் பறந்து சென்று கூடுகட்டி வாழ்ந்தாலும், தமிழ்ப் பறவைகளின் பூர்வீகம் ஒன்றே ! நடையிலும் உடையிலும் மாற்றங்கள் வந்து, பேசும் தமிழ் கூட சற்றே பிறழ ஆரம்பித்தாலும் உள்ளூார்ந்த தமிழ் உணர்வு என்றுமே நமக்கு நம்மை யாரென்று சொல்லிக்கொண்டே இருக்கும்.

தேம்ஸ் நதி தீரத்து தேமதுரத் தமிழ் பேசும் குடும்பம், சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தின் இராசதானி இலண்டன் மாநகரில் வசிக்கும் ஆயிரக் கணக்கான தமிழ்க் குடும்பங்களில் ஒன்று மாலதியுடையது, காதலித்து கரம் பிடித்திருந்தாள் கணவனை, நகையும் சதையும் போல, ஒன்றை ஒன்று பிரியாத அன்றில் பறவைகள் போல வாழ்க்கை ஓடியது !
ஒரு மாசி மாத மாலைப்பொழுது, வீட்டின் கோலிங் பெல் அடித்தது, மாலதி சென்று பார்க்கையில், வந்திருந்தது அவளது தோழி உமா ! தோழிகள் பேச ஆரம்பித்தனர், ஆனால் மாலதியின் முகத்தில் படிந்திருந்த வாட்டத்தை உமாவால் உணரமுடிந்தது !
ஏன் மாலதி முகம் வாட்டமாயிருக்கு ? உன் கணவர் இப்போது தானே லீவுக்கு வந்துட்டு போனார் என்றாள். வேறென்ன கவலை உனக்கு என்று கேட்டாள் !
பெருமூச்சு விட்டவளாய் சொல்ல ஆரம்பித்தாள் மாலதி,
கடந்த சில மாதமாகவே அவர்க்கு அடிக்கடி மற்ற நாடுகளுக்கு வேலை விஷயமா போகவேண்டி இருக்கு, சிலசமயம் ஓரிரு வாரங்கள் சில சமயம் ஓரிரு மாசங்கள் கூட ! இதோ இந்த கிறிஸ்துமஸ் லீவுக்கு வந்திருந்தார்.

ஜோடி போட்டு இலண்டன் முழுசும் ஒரு சுற்று சுற்றி வந்துட்டோம், அவர் கூட இருக்கும்போது தண்ணி இல்லைனாலும் வெறும் மனுஷதலைகளா தெரிகிற நல்லூர் தேர்த்திருவிழாவை அப்பா தோள்மேல உக்காந்துகொண்டு சுத்திவர மாதிரி ஒரு சந்தோஷம்.
ஆனா லீவு முடிஞ்சு போகும்போது ! ஓயாம அடித்துக்கொண்டு இருந்த பிக்பென் கடிகாரம் இப்போ பராமரிப்புக்கு மூடி வச்சிருக்கிறார்கள். சுத்திபாக்கிறர்கள் போகமுடியாம வெறும் பறவைகள் தான் அது மேல் போய் அமர்ந்திருக்கிறது. அது மாதிரி மனசு வெறுமையா இருக்கு ! என்று முடித்தாள்.
இந்த தோழியிடம் புலம்பும் பழக்கம் தமிழ் பெண்களுக்கு ஒன்று புதியதல்லவே, சற்றே உலகை காலத்தால் பின் சுழல விட்டு குறுந்தொகை காட்சியொன்றை காண்போம் !

## காதலர் உழையராகப் பெரிதுவந்து

சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற
அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணிலாடு முன்றில்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழி அவர் அகன்ற ஞான்றே.

(குறுந்தொகை 41 அணிலாடுமுன்றிலார் )
காதலர் அருகில் இருக்கும்போது பெரிதும் மகிழ்ந்து திருவிழாக்காணும் ஊரைப்போல மகிழ்வேன், ஆனால் அவர் பிரிந்து சென்றபின் பாலைவழிக்கு அருகில் அழகிய ஊரில் மக்கள் வசிக்காமல் கைவிட்ட வீட்டின் முற்றத்தில் அணில்கள் விளையாடும் அது போல தனிமையாய் உணர்கிறேன் தோழி என்று தலைவி உரைக்கும் பாடல்.

## சிறுகதைகள்

இளையவர்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.
A4 ஒன்றரைப்பக்கம் வரும்படியான குறுங்கதைகள் வரவேற்கப்படுகின்றன.பாமினி எழுத்தில் அடித்து வெற்றிமணி மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.
vettimaniy@hotmail.com






தொகுப்பு: ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன்

**வுப்பெற்றால் நவதுர்க்கா அம்பாள் ஆலயம்**
கொடி 05.05.2018 Hünefeld Str 63b, 0202 479 60 17
தேர் 19.05.2018 42282 Wuppertal

**யுலிச் ஸ்ரீ நவசக்திவிநாயகர் ஆலயம்**
கொடி 26.05.2018 Hoch Str 10b 02164 7020 944
தேர் 03.06.2018 41363 Jüchen

**சுட்காட் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்**
கொடி 02.06.2018 Lehmfeld Str 18 0711 67 393 522
தேர் 10.06.2018 70374 Suuttgart.

**ஹம் ஸ்ரீ காமாட்சிஅம்பாள் ஆலயம்**
கொடி 11.06.2018 Siegenbeck Str 04-05 02388 302 223
தேர் 24.06.2018 59071 Hamm.

**டோட்மூண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்**
கொடி 16.06.2018 Kiefer Str 24 0231 72 51 51 65
தேர் 24.06.2018 44225 Dortmund.

**பிறாங்போட் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்**
கொடி 17.06.2018 Adelbert Str 61-63 069 979 45 618
தேர் 30.06.2018 60486 Frankfurt/M

**கிறிவீல்ட் ஸ்ரீ நாகபூசணிஅம்பாள் ஆலயம்**
கொடி 23.06.2018 Girmesgath 95 02151 565 00 45
தேர் 01.07.2018 47803 Krefeld.

**கொமஸ்பாக் ஸ்ரீ குறிஞ்சிக்குமரன் ஆலயம்**
கொடி 23.06.2018. Industrie Str 7 02261 913 133
தேர் 01.07.2018 51643 Gummersbach.

**ஆடி மாதமும் அதன் பின்னருமான தேர்த் திருவிழா காலம் ஆனி மாத இதழில் வெளிவரும்.**


**வெற்றிமணியில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 0163 199 2333**
புதிய விளம்பரங்களுக்கு மாதம் தோறும் 12ம் திகதிக்கு முன் தொரடர்பு கொள்ளவும்



# பழைமைக்குத் திரும்பும் உலகம்







**கௌசி**

பழைமை என்னும் பதத்திற்கு தொன்மையோடு தொடர்புடைய அனைத்தையும் எடுத்துக் கூறலாம். மூத்தது, முதியது, பண்டையது எனப் பலவாறு கூறலாம். தொன்று தொட்டு வழங்கி வரும் பழக்கங்கவழக்கங்கள் காலமாற்றத்தற்கேற்ப மாறிவந்த சூழலுக்கேற்ப மாறுபட்டு வந்திருந்தமை கண்கூடு. பழைமை வாய்ந்த அனைத்தையும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய அதேவேளை அவற்றின் மாற்றத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை எம்மவர் மத்தியில் காணப்பட்டது.

ஆதிகால மனிதன் ஆடையின்றி, காட்டிலே திரிந்து கண்ணுக்குட்பட்ட விலங்குகளை வேட்டையாடி, இறைச்சியை நெருப்பிலே வாட்டி உண்டு, காயங்களுக்கும் நோய்களுக்கும் பச்சிலை மருத்துவம் பார்த்து வாழ்ந்து வந்தான். ஆடைக்காக இலைகுழைகளை அணியத் தொடங்கினான். காலப்போக்கில் தனக்கான ஒரு குடும்பம், ஒரு சமூகம் என வாழப் பழக்கப்பட்டபோது வேட்டையாடுதலில் இருந்து மேம்பட்டு தோட்டம் செய்யத் தலைப்பட்டான். அப்போது தனக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு பொதுச்சந்தையில் தனது பொருள்களை பேரம்பேசி பண்டமாற்று முறையிலே இது தந்தால், இதைத்தா என்று பெற்றுக் கொள்ளும் முறையைக் கொண்டு வந்தான். அதன் பின்தான் பணம் என்னும் ஊடகசாதனம் உதவிக்கு வந்தது. தொழில்கள் மேம்பட்டன, ஆடைகள் நெய்யத் தொடங்கி, வகைவகையாய் அணியத் தொடங்கினார்கள்.

இவ்வாறான வளர்ச்சி பெற்ற மனிதன், இன்றைய நிலையை நினைத்துப் பார்க்கும் போது அவன் பழைமையை நாடுவதை அனுபவத்தின் மூலமும்

**யேர்மனியில் ஒரு கிராமத்தில் ஆடையில்லாது நடப்பதற்காகச் செல்கின்றார்களாம்.**

அறியக் கூடியதாக உள்ளது. காட்டிலே திரிந்த மனிதன் சமைத்த உணவை உண்ணாது, வாட்டிய இறைச்சியையும் புழு பூச்சிகளையும் உண்ட நிலை காணப்பட்டது. இன்று Grill, Barbecue என்று கூறி மரங்கள் நிறைந்த பகுதிகளிலும், வீட்டிற்கு வெளியிலும் இறைச்சியை வாட்டி உண்டு மகிழ்கின்றனர். ஒரு வாகனத்தில் தோலுரித்த முழு மாட்டைத் தொங்கவிட்டு நெருப்பிலே வாட்டிக் கொண்டிருப்பார்கள்.

சுற்றவர மரங்களை செயற்கையாகவே கொண்டு வந்து நிறுத்தி காடு போன்று உருவாக்கி, அங்கிருப்பவர்கள் அவ்வாட்டிய மாட்டிறைச்சியை வெட்டி வெட்டி உண்டு மகிழ்வார்கள். இதுபோன்ற நிகழ்வுகள் ஜேர்மனியில் சில பகுதிகளில் நடைபெறுகின்றது. புதுமை மிஞ்சிய நிலையில் பழைமைக் கவர்ச்சி தற்போது ஏற்படுகின்றது. இதைவிட புழு பூச்சிகளை உண்ணும் காட்சியை பெரும் நிகழ்வாகவே தொலைக்காட்சிகளில் காட்டி மகிழ்கின்றார்கள். Ich bin ein Star holt mich hier raus என்னும் நிகழ்ச்சி பெயர் போன ஒரு நிகழ்ச்சியாக ஜேர்மனிய தொலைக்காட்சிகளில் காட்டப்படுகின்றது. அதில் பிரபல நட்சத்திரங்கள் பங்கெடுத்து மகிழ்ச்சியடைகின்றார்கள்.

பண்டமாற்று முறை தற்காலத்தில் நாடுகளிடையே நடைபெறுவது யாவரும் அறிந்ததே.

தொடர்ச்சி 29 ம் பக்கம்



29 ம் பக்கத் தொடர்ச்சி....

## பழைமைக்குத் திரும்பும் உலகம்



தமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு ஏற்ற பொருள்களை அந்நியநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் பண்டமாற்று முறை தற்போது பெருகிவருகின்றது. இதுவே ஆரம்ப காலத்தில் வெளிநாட்டு வாணிகம் என்று நாம் கூறும் வியாபாரத்தை யவணர்கள் என்று அழைக்கப்பட்ட வியாபாரிகள் மிளகை எடுத்து தமது பொருள்களை எமக்குத் தந்துவிட்டுப் போன வாணிகத்தை நாம் அறிந்திருந்தோம்.

ஒரு கிராமத்திலிருந்து அதிகாலை மாட்டுவண்டி கட்டிக் கொண்டு பொதுச்சந்தைக்குச் சென்றால், தமக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் அச்சந்தையிலே இருந்து பெற்றுக் கொண்டு மாலை வீடு திரும்பிய மனிதன் அக்காலம். தற்போது shopping centre போனால், எமக்குத் தேவையான உணவுப் பொருள்களிலிருந்து மின்சார உபகரணங்கள் வரை நாம் பெற்றுக் கொண்டு வந்துவிடுகின்றோம். அதைவிட டிஸ்கோ, திரைப்படம் போன்ற நிகழ்வுகளையும் அக்கட்டிடத்தினுள்ளேயே முடித்து வருகின்றோம்.

அக்காலத்தில் வீட்டிற்கு மரக்கறி, மீன்வகைகள், உடைகள் விற்பதற்காக மனிதர்கள் வருவார்கள். அவர்களிடம் பேரம் பேசி வீட்டில் இருந்தபடி பொருள்களை வாங்கி விடுவோம். தற்போது இதேநிலை நடைபெறுகிறது onlineshop என்ற பெயரில் வீட்டில் இருந்தபடி பொருட்களை வாங்கி வீட்டில் இருந்தபடி online Bank மூலம் பணத்தைச் செலுத்திவிட்டு இருந்து விடுகின்றோம்.

பதஞ்சலி முனிவரினால் அறிமுகப்படுத்தப்பட்ட பழைமையான யோகக்கலை இன்று உலக நாடுகள் அனைத்திலும் மேலோங்கி ஆதரிக்கப்படுகின்றது. சித்த மருத்துவத்தையும், ஆயுர்வேதத்தையும் நோக்கி ஓடுகின்றான் மனிதன். வீட்டுத் தோட்டம் என்றும் Bio மரக்கறிகள் என்றும் தேடுகின்றான் மனிதன். வீட்டுப் பலகணியில் தோட்டம் செய்யும் திட்டம் அமோக வரவேற்பை இந்தியாவில் பெற்றிருக்கின்றது. அதுமட்டுமல்ல தாய்நாட்டில் வீட்டுத் தோட்டம் செய்வது கேவலம் என்று வாழ்ந்த எம் இனத்தவர்கள், வெளிநாடுகளில் தமது பலகணியிலும் தோட்டத்திலும் மிளகாய்ச் செடிகளும், கத்தரிக்காய், கறிவேப்பிலை மரங்களும் நாட்டித் தோட்டம் செய்வது கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஜேர்மனியில் ஒரு கிராமத்தில் ஆடையில்லாது நடப்பதற்காகச் செல்கின்றார்கள். அப்பகுதியில் யாருமே செல்ல முடியாது.கற்கால மனிதர்களை நினைவுபடுத்தி சுத்தக்காற்றையும் சூரியனின் கதிர்களையும் பெறுவதற்காகச் செல்வதாகக் கூறி கற்கால மனிதரைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றார்கள். சுயம்பரம் என்ற பெயரிலே ஒரு பெண் தனக்குத் தேவையான ஆணைத் தெரிவு செய்வாள். ஒரு பெண்ணின் சுயம்பரத்திற்குப் பல இளவரசர்கள் வரிசையாக வருவார்கள். அவர்களில் தனக்குப் பிடித்த மணமகனை மாலையிட்டுத் அவள் தெரிவு செய்வது இலக்கிய காலம். இதைவிட Bachelor என்னும் ஒரு ஜேர்மனிய தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஒரு ஆண் பல பெண்களுடன் பழகித் தனக்குப் பிடித்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதற்காகத் தெரிவு செய்வார். இதேபோன்று தற்போது ஆர்யா எங்க வீட்டு மாப்பிள்ளை என்னும் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பல பெண்களுடன் பழகித் தனக்குப் பிடித்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளப் போகின்றார். அரச வம்சத்தினரிடையே இருந்துவந்த நடைமுறை தற்போது சாதாரண மக்கள் மத்தியிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இலக்கியக் கால பெண்கள் சேலைக்கு அணியும் Blouse கச்சை என்று அழைக்கப்பட்டது. காலப்போக்கில் அம்முறை வழக்கொழிந்து வேறுவிதமாக அணியப்பட்டது. ஆனால், இப்போது மீண்டும் அதேவடிவத்தில் Saree Blouse ஐப் பெண்கள் திரும்பவும் கொண்டு வந்திருக்கின்றார்கள்.
ஆடைகள், உணவுப்பழக்கவழக்கங்கள், விளையாட்டுக்கள், கலைப்படைப் புக்கள், திரையிசைப்பாடல்கள் என்று எல்லாமே பழைமையை நினைவு படுத்துவதுடன் பழைமையை நேசிப்பதாகவும் பழைமைக்குத் திரும்புவ தாகவும் இருக்கின்றது.



ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte


## 4 ஆவது முறையாக ஜேர்மனியின் கான்சிலரானார் !!!

25 ம் பக்கத் தொடர்ச்சி....



இந்த நிலையில், கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எதிர்பாராத விதமாக மெர்க்கெலின் குடியேற்றக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்த வலதுசாரி கட்சியான ஜெர்மனின் மாற்றத்துக்கான கட்சி, 94 இடங்களைக் கைப்பற்றியது.
இதனால், ஆளும் கட்சிக்கு போதிய பெரும்பான்மை கிடைக்காத நிலை ஏற்பட்டு அரசியல் நிச்சயமற்ற தன்மை நிலவி வந்தது. இந்தச் சூழலில்தான் இரண்டாவது பெரிய கட்சியுடன் கூட்டணி அமைத்து ஏஞ்சலா மெர்க்கெல் 4-ஆவது முறையாக மீண்டும் கான்சிலராகியிருக்கிறார். யேர்மனியின் அதிகாரம்கூடிய பதவியாகக் கருதப்படும் கான்சில் பதவி என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும். திருமதி அஞ்சலா மேக்கல் அவர்கள் ஐரோப்பாவின் மிக அதிகாரம் மிக்க தலைவர் மட்டுமல்ல உலகிலேயே ஆட்சிசெய்யும் அதிகாரம் கூடிய பெண்மணிகளில் முதல்வராகவும் விளங்குகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.
இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் கடந்த 30, 40 வருடங்களாக அரசியல் தஞ்சம் அளித்து. உயிர்ப்பாதுகாப்பு வழங்கிப் பாதுகாத்த இந்த அம்மையாரை நாம் மறக்கமுடியாது. மனிதாபிமான அடிப்படையில் நம்மவர்களுக்குப் பல வழிகளிலும் உயர்ச்சி பெற வைத்தவரை நாம் போற்றவேண்டும். வாழ்த்துவோம்.
புதிதாகப் பதவி ஏற்ற 16 பேரில் 7 பேர் பெண்களாவர் மிகுதி 9 பேர் ஆண்கள். யேர்மன் அரசியலில் பெண்களின் பங்களிப்பைப் பார்த்தால் 50க்கு 50என்ற வீதத்தை விரைவில் எட்டிப் பிடிப்பார்கள். பெண்களுக்கு வாழ்த்துக்கள். இந்தக்கூட்டரசில் CDU கட்சியைச் சேர்ந்த 7 பேரும் ஞீனு கட்சியைச் சேர்ந்த 6 பேரும் CSU கட்சியைச்சேர்ந்த 3 பேரும் அமைச்சர்களாகப் பதவி ஏற்றுள்ளனர்.


Milin Impex GmbH
எமது விலைகளை அறிய
எமது இணையத்தளத்தை
பார்வையிடவும்
எங்கள் இனிய
தமிழ் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

Web :www.milinimpex.de
எமது நிறுவனம் Mo-Sa 10.00 இருந்து 18.00 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288



# தானாச் சேர்ந்த காதல்

தமிழ் சினிமாவின் லேடி சூப்பர்ஸ்டார் என ரசிகர்களால் கொண்டாடப்படும் நயன்தாரா நேற்று 24.03.2018 ஒரு விருது விழாவில் கலந்துகொண்டார்.
நயன்தாரா நயன்தாரா தமிழ் சினிமாவில் நம்பர் ஒன் நடிகையாக இருப்பவர் நடிகை நயன்தாரா. எல்லோராலும் லேடி சூப்பர் ஸ்டார் என்றழைக்கப் படுகிறார். ஹீரோயினுக்கு முக்கியத்துவம் வாய்ந்த படங்களில் அதிகளவில் நடித்து வருகிறார் நயன்.

இயக்குனர் விக்னேஷ் சிவனும் சில ஆண்டுகளாக காதலித்து வரும் நிலையில், இருவரும் வெளிப்படையாக தங்களது காதல் பற்றி தெரிவிக்கவில்லை. எனினும், இருவரும் நெருங்கியிருக்கும் புகைப்படங்கள், பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவிப்பது போன்றவை மட்டும் சமூக வலைதளங்களில் வைரலாகி வந்தது. பகிரங்க அறிவிப்பு பகிரங்க அறிவிப்பு இந்த நிலையில், தற்போது காதலர் விக்னேஷ் சிவன் பற்றி முதன்முறையாக பொது மேடையில் நடிகை நயன்தாரா பகிரங்கமாக அறிவித்துள்ளார்.
நயன்தாரா சென்னையில் ஒரு விருது வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றார். அப்போது பேசிய அவர், "அம்மா, அப்பா, சகோதரர், வருங்கால கணவர் என்று அனைவருக்கும் முதலில் நன்றி" எனத் தெரிவித்துள்ளார். ரசிகர்கள் ஆச்சரியம் ரசிகர்கள் ஆச்சரியம் விக்னேஷ் சிவனை தனது வருங்கால கணவர் என்று முதன்முதலாக நயன்தாரா கூறியதைக் கேட்டு அனைவரும் வியப்பில் ஆழ்ந்துள்ளனர். நயன்தாரா விக்னேஷ் ஆகியோர் தொடர்பாக இதுவரை பரவி வந்த வதந்திக்கு இது முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது. இது தானாச் சேர்ந்த காதல்.'

## நீ பாதி! நான் பாதி!




கமல்ஹாசன் நடிப்பில், ஷங்கர் இயக்கத்தில் 1996ஆம் ஆண்டு ரிலீஸான படம் 'இந்தியன்'. இந்தப் படத்துக்குப் பிறகு இருவரும் சேர்ந்து படம் செய்யவே இல்லை.
இப்போ மறுபடியும் இருவரும் இணைந்துள்ளனர். 'இந்தியன் 2' உருவாகப் போகிறது. லைகா நிறுவனம் இந்தப் படத்தைத் தயாரிக்கிறது. கமல் கட்சி ஆரம்பித்து, ஊர் ஊராக பிஸியாகச் சுற்றி வருகிறார். அதற்கு அடுத்த படியாக அவர் பிக் பாஸ்' நிகழ்ச்சியின் இரண்டாவது காட்சிகளையும் தொகுத்து வழங்குவதாக கூறப்படுகிறது.
இந்நிலையில், கமல்ஹாசன் பிக்பாஸ்-2 நிகழ்ச்சியை விஜய் டிவிக்கு முடித்து கொடுத்து விட்டு இந்தியன் 2 படத்தின் படப்பிடிப்பை ஆகஸ்ட் மாதம் தொடங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அரசியல் செய்ய அவசரம் அவசரமாகப் படம் பண்ணவேண்டியுள்ளது. மதுரையை மீட்ட சுந்தரபாண்டியனுடன் காலா கரிகாலனனோ மருதநாயகமோ மோத முடியுமா?



## சொல்வது நடந்தால்!!!

சூர்யா தயாரிப்பாளர்களின் நிதிச் சுமையை குறைக்க புது முயற்சியில் ஈடுபட்டுள்ளார். நடிகர்கள் மட்டும் அல்ல அவர்களின் உதவியாளர்களுக்கும் தயாரிப்பாளர்களே சம்பளம் கொடுத்து வருகிறார்கள்.

இந்நிலையில் தயாரிப்பாளர்களின் நிதிச் சுமையை குறைக்க சூர்யா அதிரடி முடிவு எடுத்துள்ளார். அதாவது தனது உதவியாளர்களுக்கு தன் சொந்த பணத்தில் இருந்து சம்பளம் கொடுப்பது என்று முடிவு செய்துள்ளார் சூர்யா. சூர்யாவின் முடிவை பார்த்து அவரின் தம்பி கார்த்தியும் தன் உதவியாளர்களுக்கு தானே சம்பளம் கொடுக்க தீர்மானித்துள்ளார். கார்த்தி மட்டும் அல்ல அவரின் நெருங்கிய நண்பரான விஷாலும் சூர்யா வழியை பின்பற்றப் போகிறாராம்.

இதே போன்று பிற நடிகர்களும் சூர்யாவின் வழியை பின்பற்றுவார்களா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. நடிகர்கள் மட்டும் அல்ல நடிகைகளும் சூர்யாவின் வழியை பின்பற்றினால் நன்றாக இருக்கும் என்று கூறப்படுகிறது. அட இவ்வளவு நாளாக உதவியாளர்களுக்கும் தயாரிப்பாளர்களா சம்பளம் கொடுத்தார்கள். இன்னும் யார் யாருக்கு கொடுக்கிறார்களோ!

## யேர்மனியைச் சேர்ந்த ஷரீகா சிவநாதன் சர்வதேச பாட லாசிரியர் விருதை (Edison) பெற்றுக்கொண்டுள்ளார்.

எடிசன் சர்வதேச பாடலாசிரியருக்கான விருது 2018 எடிசன் நிறுவனம் ஆண்டு தோறும் பல துறைகளில் சிறந்து விளங்குபவர்களை இனம் கண்டு எடிசன் விருது வழங்கி மதிப்பளித்து வருகிறது.
இவ்வருடம் 25.2.18 இல் சென்னையில் நடை பெற்ற எடிசன் விருது விழா 2018 இல் இவ்வருடத்திற்கான சர்வதேச பாட லாசிரியர் விருதை Edsion Best Lyrcist overseas Award 2018 விருதை யேர்மனியைச் சேர்ந்த ஷரீகா சிவநாதன் பெற்றுக்கொண்டுள்ளார். இவ்விருதை மலையாள நடிகை பார்பதி நாயர் அவர்கள் வழங்கி கௌரவித்தார். இவருடைய பாடல் திரைப்படம் ஒன்றிற்கு வர இருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் வளர வெற்றிமணியின் வாழ்த்துக்கள்.



ஷரீகா சிவநாதன் – பார்பதி நாயர்




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Emirates
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
எங்கள் இனிய
தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
இந்தியா- இலங்கை- விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
புதிய டிசைன்கள் புதியவரவுகளுடன் புதுவருட
மாபெரும் மலிவு விற்பனை!
16.03.2018 முதல் 14.04.2018 வரை
எங்கள் இனிய
தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
எங்கள் இனிய
தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
VALUTRANS MONEY TRANSFER
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கனேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
எங்கள் இனிய
தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிடேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


எங்கள் இனிய
தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Video Filming
Album Making
Graphic Desiging
Your Dreams Comes True
AKR Visualizers
BOOK A SESSION NOW AT
professional photography & cinematography
0049 231 5897 7140
0049 162 803 1647
Rheinische Str. 56
44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
எங்கள் இனிய
தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


StaR - Impex
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Rabeena
எங்கள் இனிய
தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
இலங்கையில் தயாரிக்கப்பட்ட
Rabeena தயாரிப்புக்களின்
யேர்மனிக்கான ஏக விநியோகஸ்த்தர்
Kipper Str.3 44147 Dortmund Germany